ஓம்

ஞானசாகரம்

5- JUL 1922

இது

சமரசசன்மார்க்க நிலயத்தின்

அரிய பெரிய செந்தமிழ்விளக்கப்பதிப்பு

பது, ௧௦] துன்மதி௵ பங்குனி, துந்துபி௵ சித்திரை [இ, ௨, ௩.

பொருளடக்கம்

மக்கள் நூறுவருஷம் உயிர்வாழ்தல் எப்படி?
(How to live hundred years?)

யோகநித்திரை (Hypnotism)

ஆசிரியர்

ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள்

சமரசசன்மார்க்க நிலய குரு,

பல்லாவரம்

பல்லாவரம், சமரசசன்மார்க்க நிலயத்தின்கண் உள்ள

டி. எம். அச்சுக்கூடத்திற்

பதிப்பிடப்பட்டது;

June, 1922.

ஒருபதுமக் கையொப்பம்] [நான்கு ரூபா

All Rights Reserved.

யாழ்ப்பாண

ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாச

மறைமலையடிகளால

செய்யப்பட்ட விரிவுரைகள்:

சுவாமிகளிடத்தில் நீண்டகாலமாக அன்புபூண்டவரும், தமிழ் ஆ என்னும் இருமொழிகளிலுஞ்சிறந்த புலமையுடையவரும், யாழ்ப்பாணத்து அருகில்உள்ள மானிப்பாய் இந்துக்கல்லூரித் தலைமையாசிரியரும் ஆன பண்டிதர் திருமயில்வாகனம் பிள்ளையவர்கள் தமது இந்துக்கல்லூரியில் 'திருக்குறளை'ப்பற்றி ஒரு விரிவுரை நிகழ்த்தும்படி வேண்ட அதற்கிசைந்து டிசம்பர்மீ 30-ஆம்நாள் மாலை 6 மணிமுதல் இத்துக்கல்லூரிமண்டபத்தில் அப்பொருளை இரண்டுமணிநேரம் வரையிற் றேன்மாரி பொழிந்ததெனப் பேசினார்கள். இதனை வந்துகேட்ட பெருந்திரளான அன்பர்களும் 'இதற்குமுன் திருக்குறளைப்பற்றி யாம் கேட்டிராத பலநுண்ணிய மெய்ப்பொருள்களை யெல்லாம் கேட்டுத் தெளிந்தேம்' என்று கூறிச் சுவாமிகள் பேசுந்திறத்தை மிகவியந்து சென்றார்கள். யாழ்ப்பாண வட்டத்திலுள்ள முதன்மையான பலஊர்களிலும் சுவாமிகளின் விரிவுரைகள் நடைபெறவேண்டி யிருந்தமையாலும், கீரிமலை அவ்வூர்கட்கெல்லாம் நெடுந்தொலைவில் இருந்தமையாலும், பண்டிதர் மயில்வாகனம் அவர்கள் மானிப்பாயில் உள்ள தமது இல்லமே யாழ்ப்பாணவட்டத்திற்கு நடுவாயிருத்தலால் அங்குவந்திருக்கும்படி வேண்டினமையாலும் சுவாமிகள் அங்ஙனமே அங்கேசென்று தங்குதற்கு வேண்டும் ஏற்பாடுகள் அவர்களாலும் தம்பையாபிள்ளை யவர்களாலும் செய்யப்பட்டன. டிசம்பர் 31-ஆம்நாட் பிற்பகல்முதல் சுவாமிகள் மானிப்பாயில் தங்குவாரானார்கள்.

இனி, 1922ஆம் ஜனவரித்திங்கள் 2-ஆம்நாள் மாலை, வட்டுக்கோட்டையைச்சேர்ந்த சித்தங்கேணிக் கல்விச்சாலை மண்டபத்தில் 'சைவசித்தாந்தம்' என்னும் அரும்பெரும் பொருளைப்பற்றிய ஓர் ஆழமான விரிவுரை 2 மணிநேரம் சுவாமிகளால் மிகத் தெளிவாகவும் இனிதாகவும் நிகழ்த்தப்பட்டது. பெருந்திரளான அன்பர்கள்வந்து கேட்டுவியந்து மகிழ்ந்தனர். ஆங்கிலத்திற் பெரும் புலமைவாய்ந்த ஒருவர் 'இதுகாறுஞ் சைவசித்தாந்த உண்மைகளை அவை தெரிந்த பலரிடமும் உசாவினேம். ஒருவராவது தெளிவாகவும் எம்மனத்திற் படும்படியாகவுங் கூறினார் அல்லர். இன்றைக்குத் தாங்கள் கூறிய விரிவுரையாற் சைவசித்தாந்தம் இன்னதென்று நன்குதெளியப்பெற்றேம். தாங்கள் அதனைத் தெளிவாக வரையறுத்துக் காட்டினீர்கள். வீணுக எவரையேனும் யாம் புகழ்ந்துபேசேம்; உண்மையேகூறினேம்' என்று தமதுள்ளம் பொங்கிக் கூறினார்.

இனி, ஜனவரி, 5-ஆம்நாள் மாலை, யாழ்ப்பாணத்துப் பார்வதிவிலாச வித்தியாசாலையின் மிகப்பெரிய அன்பர்கூட்டத்திடையே 'உயிரின் இலக்கணம்' என்னும் அரும்பொருளைப்பற்றி 2 மணிநேரம்வரையிற் படிப்படியாக மிக அழகாகப்பேசினார்கள். இதனைப் பெண்பாலாரும் பலர்வந்துகேட்டனர். விரிவுரைமுடிவில், சட்டநூல்வல்ல திருவாளர் அருளம்பலம் அவர்கள் எழுந்து விரிவுரை நுட்பத்தையும், அஃது இஞ்ஞான்றை ஆராய்ச்சிநூற் பொருள்களுக்கு இசைந்திருத்தலையும், எடுத்தபொருள் எல்லார் உள்ளத்திலும் பதியுமாறு தெள்ளத்தெளிய விளக்கப்பட்ட திறத்தையும் வியந்துபே[illegible]னார்கள்.

ஆறாம்நாள் அருளம்பலம் அவர்கள் நேரே சுவாமிகளை இருப்பிடத்தில் வந்துகண்டு சைவசித்தாந்தத்தைப்பற்றித் தாங்கேட்க நினைந்தவைகளை யெல்லாம் வினவி, எல்லாவற்றிற்கும் இசைவானவிடைகள் பெற்றுத் 'தாங்கள் கூறியவைகள் எல்லாம் பொருத்தமான உண்மைகள்; இவற்றை எல்லார்க்கும் விளங்கப்படுத்த வேண்டுமென்று கூறியதோடு, மற்றுமொரு விரிவுரைக்குத் தாமே எல்லா ஏற்பாடுகளுஞ் செய்வதாகவுங் கூறிச்சென்றார்கள். சுவாமிகள் 3 மணிநேரம்வரையில், அருளம்பலம்அவர்கள் கேட்ட வினுக்களுக்கெல்லாம் விடைபகர்ந்தார்கள். அப்போது பண்டிதர் மயில்வாகனம்பிள்ளை யவர்களும் கூடஇருந்து அவைகளையெல்லாங்கேட்டு மகிழ்ந்தார்கள். ஏழாம்நாள் மாலையி

JUL 1922

...கொடுத்துவிடும். இதனைத் திருவள்ளுவநாயனாரும்
...னநலன் நன்குடையராயினுஞ் சான்றோர்க்
கினநலன் ஏமாப்புடைத்து" என்று அறிவுறுத்தருளினார். ஆதலால், ஓர்உயர்ந்த ஆண்மகன் இழிந்தஒருபெண்மகளை மனைவியாகப்பெற்று அவளோடு கூடிவாழ்தலும், ஓர்உயர்ந்தபெண்மகள் இழிந்தஓர்ஆண்மகனைக் கணவனாகப்பெற்று அவனோடு கூடியிருத்தலுஞ் சிறிதும் ஆகாவென்க.

நன்றுசொன்னீர், உயர்ந்தோன் ஒருவன் இழிந்தஒருத்தியை மருவிவாழ்தல் ஆகாதாயினும், உயர்ந்தோள் ஒருத்தியும் இழிந்தஒருவனை மணந்துவாழ்தல் ஆகாதெனஉரைத்தல் பொருந்தாது; என்னை? தன் தாய்தந்தையராலும் உற்றார்உறவினாராலுந் தனக்குக்கணவனாக அமைக்கப்பட்டவன் எத்துணைஇழிந்தவனாயிருப்பினும் அவனைத் தெய்வமாகநினைந்து அவனை வழிபட்டுஒழுகுதலே ஒருபெண்மகளுக்குக் கற்பொழுக்கமாகலின் என்றாற், கற்பொழுக்கத்தின் இயல்பு அறியாது கூறினாய். கற்பு என்பது பிறரால் வலிந்து புகுத்தப்பட்டு ஒருத்திக்கு வருவதன்று; அது பேரன்பின் முதிர்ச்சியால் வருவதொன்றாம். ஒத்தநலங்களும் ஒத்தஇயல்புகளும்வாய்ந்த ஓர் ஆண்மகனும் ஒருபெண்மகளும் ஒருவரையொருவர் உயிர்போல் நினைந்துவாழும் உயர்ந்த அன்பொழுக்கமே கற்பொழுக்கமென ஆன்றோரால் நாட்டப்பட்டது. இது,

"தானே யவளே தமியர் காணக்
காமப்புணர்ச்சி இருவயின் ஒத்தல்" என்னும் இறையனாரகப்பொருட் சூத்திரத்தானும், மாணிக்கவாசகப்பெருமான்

"காகத் திருகண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கிருவர்
ஆகத்துள் ஓர்உயிர் கண்டனம் யாமின் றியாவையுமாம்
மேகத் தொருவன் இரும்பொழில் அம்பல வன்மலையில்
தோகைக்குந் தோன்றற்கும் ஒன்றாய்வரும் இன்பதுன்பங்களே" என்று அருளிச்செய்த திருக்கோவையார் செய்யுளானும் நன்குவிளங்கும். இங்ஙனம் இருவர்உயிரும் ஓர்உயிராய், ஒருவர்க்குவரும் இன்பதுன்பங்களெல்லாம் மற்றவர்க்கும் உடனே நிகழுந்தரத்தினவாய்க் கலக்குமாறு செய்யவல்லது முதன்முதல் அவர் தம்முள் எழுந்த பேரன்பின்பெருக்கால் ஒருவ

தமிழ்நாடு ... கப்பக நிலையம்

ரையொருவர் இன்றியமையாராய் நினைந்து ஒருவா...
வர்வைத்த வேட்கைமிகுதிபேயாம். இத்தகைய ...
மிகுதியால் உள்ளம்நிறைந்த ஒருமாது தன்காதலனையன்றி
பிறன்ஒருவனை எவ்வகைமேம்பாடும்பற்றி எக்காலத்துந் தன்
னுள்ளத்தில் நினைத்தற்குத் தினைத்தனையும் இடம்பெறாள்.
அவள்பாற் காணப்படும் இக்காதலன்பொழுக்கமே உண்மைக்
கற்பொழுக்கமென்று உயர்த்துக்கூறப்படும். உயர்ந்தநலங்கள்
வாய்ந்தஒருபெண்மகள் எந்நிலையிலிருந்தாலும் எவ்வகையான
கட்டுப்பாடுகளுள் வைக்கப்பட்டாலும், அவள் தனக்கு இசைந்
த ஒருவனை எதிர்ப்படுங்காலத்து இயற்கையாகவே அவன்மேல்
தன்னுள்ளம்ஓடிப் பதிவுறப்பெறுவள். இவ்வியல்பு பெண்பா
லார் ஆண்பாலார் இருதிறத்தார்க்கும் பொதுவேனும் பெண்
பாலார்க்கே சிறப்பாக ஆன்றோரால் சொல்லப்பட்டிருக்கின்
றது. ஒத்தஇயல்புடைய ஆணையும் பெண்ணையும் ஒருங்குகூட்
டுவதே இறைவனது திருவுளக்கருத்தாதலால், மக்கள் தம்மு
டைய அறியாமையாலும் செருக்காலும் தன்னயங்கருதுதலா
லும் செய்துவைக்கும் ஒவ்வாதகட்டுப்பாடுகளின் எல்லைக்குள்
அடங்காமல் அவ்விறைவன்செயல் அதனை மேற்கடந்தே நிற்
கும். முயற்சியும் உளப்பாடும்இன்றித் தெய்வத்தின் திருவரு
ளால் ஒத்தஇயல்புடையார் இருவர் ஒருங்குகூடியவழி, அக்
கூட்டம் தெய்வத்தான் நிகழ்ந்ததென்பதை அறியாமல், தம்
முடைய பொருந்தாக்கட்டுப்பாடுகளை மீறியதேஎன்னும் ஒன்
றையைநினைந்து மயக்கஅறிவுடைய மக்கள் அவரைப்புறம்
பழித்து வருத்துவர். என்றாலுந், தெய்வத்தின் ஆணையால்
நடப்பதை மக்கள் தம் புல்லியஅறிவால் எங்ஙனந் தடைசெய்
யமாட்டுவர்? ஒருவனையும் ஒருத்தியையுங் கருவிற்புகுத்துகின்
றகாலத்திலேயே ‘இவனுக்குத்தக்காள் இவள்’ என்றும் ‘இவ
ளுக்குத்தக்கான் இவன்’ என்றுந் தெய்வம் அமைத்துவிட்டி
ருப்பதனால், அவ்விருவரும் வளர்ந்து பெரியராய் ஒருவர்மேல்
ஒருவர் உள்ளம் ஓடப்பெறுதலையறிந்து அவ்விருவரையுங் கண
வனும்மனைவியுமாய் வாழ்க்கைப்படுத்துதலே தெய்வஅருளொ
ழுக்கத்தோடு இசைந்துநடப்பதாம். அஃதுஒன்றுமே மக
ளிர்க்குக் கற்பொழுக்கத்தை நிலைபெறச்செய்து இம்மைமறு

மை இன்பங்களை அவரோடு தொடர்புடையா ரெல்லார்க்கும் அளிப்பதாகும். இவ்வாறன்றித் தெய்வத்தின் திருவுளக்கட்டளைக்குமாறாய்க், காதலன்பின்முளை புலனாகாத குழந்தைப் பருவத்தும் பிள்ளைப்பருவத்தும் உள்ள சிறுவர்சிறுமியரையும், காதலன்பு தோன்றப்பெறும் இளம்பருவத்தினரேனும் ஒருவரையொருவர் எதிர்ப்பட்டுத் தம்முள்ளம் ஒருங்குகூடப்பெறாத ஆண்மக்கள் பெண்மக்களையும் அவர்க்கு முதியராயுள்ளார் சாதி குலம் பணம் உறவு நிலை கண்ணோட்டம்எனத் தம் புல்லறிவால் வகுத்துக்கொண்ட புல்லியகாரணங்கள் பற்றித் தமக்குத்தோன்றியவாறே பிணைத்துவிடுவதனாற் பலபெருந் தீங்குகளெல்லாம் உலகத்திலே நாளுக்குநாட்பெருகுகின்றன. உலகத்திலே மகளிர்க்குக் கற்பொழுக்கம் நிலைபெறுவது அரிதாயிருக்கின்றது. ஆண்மக்களும் பலவகை அல்லல்களால் அலைக்கப்பெற்று ஆண்டு முதிராமுன்னரே மாண்டுபோகின்றனர். தெய்வத்தின் கட்டளைக்குமாறாகச் செய்யப்படுங் கட்டுப்பாடுகள் ஒருகாலத்தும் நன்மைபயவா. கணவன் தனக்கு எவ்வளவுதான் இசையாதவனாயிருப்பினும், அவனுக்கு மனைவியாகப்பிணைத்து வைக்கப்பட்டவள் அவனைத் தெய்வமேபோற் கருதி ஒழுகவேண்டும்என்று ஆண்மக்களாயினோர் தம்முடைய நன்மையேகருதி எத்தனையோ நூற்றாண்டுகளாய் எத்தனையோ நூல்களில் எழுதிவைத்தும் எவ்வளவோ கட்டுப்பாடுகளைச் செய்துவைத்தும் அவர்கள் எண்ணப்படியெல்லாம் ஏதேனும் நடந்துவருகின்றதா? அறிவுடையசிலர் ஆண்மக்கள் பெண்மக்களின் மனஇயல்பை யுற்றுணர்ந்து தெய்வத்தின்கட்டளைக்கு ஒத்தவகையாய் மணங்கூட்டியசிற்சிலரே நெறிவழுவாத மெய்யன்புடையராய்ஒழுகித் தமக்கும் பிறர்க்கும் பயன்பட்டுவாழ்தலைக் காண்கின்றோமேயல்லாமல், மற்றைப்பெரும்பாலார் பொருந்தாக் கட்டுப்பாடுகளினிடையே பொருந்தித் துன்புற்று வாணாட்கழிக்கவே காண்கின்றேம்.

> "சிறைகாக்குங் காப்பெவன் செய்யும் மகளிர்
> நிறைகாக்குங் காப்பே தலை".

என்று திருவள்ளுவனார் அருளிச்செய்தது பொய்படாதன்றோ? தெய்வத்தின் அருள்வழிமேய காதலன்பு ஏவர்மேற்சென்

றதோ அவரையே தங்கொழுநராகப்பெற்ற மகளிரின்நிறை யைச்சிதைக்க வல்லுநர் மூவுலகினும் உளரோ! இனித் தங்காதலன்புக்குரியாரைக் கணவராகப் பெறவொட்டாது மக்கள் தம் புல்லறிவாற்கட்டிய சிறைக்காவல் அம்மகளிரைத் தடைப்படுத் தவல்லதாவதும் மூவுலகினும் இல்லையன்றே! சாவித்திரியை அவள் தாய்தந்தையரும் ஆசிரியரும் எவ்வளவோ தடைசெய் தும், அவள் அத்தடைகளை ஒருபொருட்படுத்தாமல் தான் காதலித்த முனிவர்மகனையே மணந்து கற்பரசியாய் விளங்கின ளென்பதும், பின்னர்த்தன் கணவனுயிரைக்கைப்பற்றிய கூற்று வனையும் தனதுவேண்டுகோளுக்கு இசைவித்து அவனைத் தன் கற்பின்றிறத்தால் உயிர்பெற்றெழச் செய்தனள்என்பதும் உலகறிந்தனவல்லவோ! தாரை மணஞ்செயப்பட்டவளாயிருந் தும் தனக்கியைந்த சந்திரனைக் காதலித்துக்கூடிப் கற்புடை யாள்எனப் பெயர்பெற்றமையும் அறியாதார் யார்? துரோப தை ஐவருக்குமனைவியாகப் புகுத்தப்பட்டும் அவள் அருச்சு னன்ஒருவனையே தனக்கியைந்தகாதலனாகக் கொண்டொழுகி 'அழியாதகற்புடையாள்'எனப் புகழ்ந்தோதப் பெற்றமையும் அறியாதார் யார்? பரத்தையர்குடியிற்பிறந்த மாதவி பிறர்மேல் மனஞ்செல்லாது கோவலனையே தனக்கினிய காதலனாய்க் கொண்டு, அவன் இறந்துபட்டபின் துறவுபூண்ட கற்பின் மேம்பாடு இளங்கோவடிகளால் உயர்த்துப்பேசப்பட்டிருக்கின் றதன்றே? இவ்வுண்மைகளை நடுநிலைபிறழாமல் உற்றுணர்ந்து பார்க்கவல்லார்க்கு ஒருபெண்மகள் தனக்கியைந்த ஒருவன் மேல் தெய்வத்தின்அருளால் மனம் பதியப்பெற்று, அவனை யே தான் வழிபடுங்கடவுளாகக் கொண்டொழுகும் ஒழுக்கமே கற்பொழுக்கமென ஆன்றோரான் உயர்த்துக்கூறப்பட்டதன் றிப் பிறிதன்றுஎன்க. இக்கருத்துப்பற்றியே

"தெய்வந் தொழாஅள் கணவற் றொழு தெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்றுதெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரும் அருளிச்செய் தார். இங்ஙனமாகச், சிறந்தஅன்புடையார் இருவரை ஒன்று கூட்டி வாழ்விக்கும்வாழ்க்கையே இல்வாழ்க்கை யெனப்படுவ தன்றி, அன்பு அகத்தே ஊறிப் பெருகப்பெறாதாரைப் பிணைத்

து இருக்கச்செய்வது இல்வாழ்க்கை ஆகாதென்பதனை நன்கு புலப்படுத்துதற்கே பின்னும்

"அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று." என்று அவர் அருளிச்செய்தார். பட்டுப்போன ஒருமரத்தைத் தளிர்க்கச்செய்தல் எவ்வாற்றானும் இயலாததுபோல இயற்கையே அன்பு உண்டாகப்பெறாதார் இருவரை ஒருதுறைப்படுத்து அவர்க்குள் அவ்வன்பினைவருவித்தல் ஒருவாற்றானும் இயலாதெனை இதனால் நன்குஅறிவித்தாராயிற்று.

பழையநாளிலிருந்த நன்மக்களும் சான்றோரும் பெண்மக்களுக்குரிய காதல்அன்பின்நிலையைத் தெளியவுணர்ந்து, அதன்வழியே அவர்களைவிடுத்து அவரதுகற்பொழுக்கத்தை நிலைபெறுவித்தற்பொருட்டே அகத்திணை இலக்கணம் வகுத்தருளினர். அகன் ஐந்திணையுட்பட்ட அன்பொழுக்கமாவது கொடுப்பாரும் அடுப்பாரும்இன்றி ஒருவனும் ஒருத்தியுந் தெய்வத்தின் அருளால் எதிர்ப்பட்டு ஒருவர்மேல்ஒருவர் ஆராக்காதலுற்று ஒருவரைஒருவர் இன்றியமையாராய்க் கூடியொழுகும் ஒழுக்கமாம். இவ்வாறு அவர்ஒழுகியபின் மணம்புகுத்தப்பட்டு இல்வாழ்க்கை நடத்தாநிற்பர். இவ்வியல்பெல்லாம் இறையனாரகப்பொருளுரையில் ஆசிரியர் நக்கீரனாராலும், திருச்சிற்றம்பலக்கோவையார் உரையில் பேராசிரியராலும், தொல்காப்பியப் பொருளதிகாரவுரையில் நச்சினார்க்கினியராலும் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. இக்காதற் கற்பொழுக்கம் பழையநூல்களிற் சொல்லப்பட்டபடியாகவே, பண்டைக்காலத்துமக்களுள்ளும் பரவியிருந்த தென்பதற்குத் தமயந்தி சகுந்தலைமுதலான கற்பிற்சிறந்த மங்கையர் தாமே தமக்குரியகாதலரைத் தெரிந்து மணந்துகொண்ட வரலாறுகளே சான்றாமென்க.

இன்னும், ஒத்தஅன்பும் ஒத்தஇயல்புமுடைய ஓர்ஆண்மகனும் ஒருபெண்மகளும் ஒருங்குகூடிஒழுகும் ஒழுகலாறே இறைவன்திருவுளத்திற்கு இயைந்ததாம்என்பதனை வேறோர் உண்மைவரலாற்றானும் விளக்கிக்காட்டுவாம். சைவசமயாசிரியராகிய சுந்தரமூர்த்திநாயனார் தம்மோடொத்த இயல்புடைய

ஓர் உயர்ந்தபெண்மணியை எதிர்ப்பட்டு அவள்பாற் காதலன்பு கொள்ளப்பெறாத இளம்பருவத்தி லிருந்தனரான்று, அவர்தம் சுற்றத்தார் அவரது உயர்ந்ததன்மைக்கு இசைந்தாள் ஒருத்தியைக் கண்டெடுக்கத்தக்க அறிவும் ஆற்றலும் இல்லாமையால், தமக்குத்தோன்றியபடி ஒருபெண்ணைத்தெரிந்து அவனை அவர்க்கு மணம்பொருத்தப் புகுந்தார். மெய்யன்பராகிய அந்நாயனார்க்கு மிகவும் அணுக்கமாய்நின்ற இறைவன், நாயனார்இயல்புக்கு ஒவ்வாதஒருத்தியை அவரோடு பிணைத்துவிட முயலும் அவ்வுறவினரின் அறியாமைச்செயலைத் தடைசெய்தற்குத் திருவுளம்பற்றி மணப்பந்தலில் ஓர் அந்தணமுதியோனாய்த்தோன்றி அதனைத் தடைச்செய்து நிறுத்தி, நாயனாரையும் அச்சுற்றத்தார்பால் இருக்கவிடாமல் தனக்கு ஓர் அடிமையாய்க்கொண்டு சென்றமையும் இத்தமிழுலகம் முழுதும் அறியுமன்றோ? அங்ஙனம் அம்முதன்மணத்தைத் தடைசெய்து நிறுத்திய முதல்வனே, பின்னர் நாயனார் தம்மியல்புக்கு முழுதும் ஒத்த பரவைநாச்சியாரையும் சங்கிலிநாச்சியாரையும் எதிர்ப்பட்டு அவர்மேல் உண்மைக்காதலன்புகொண்டு உருகாநிற்க, அவ்வாறே அந்நாச்சிமாரும் நாயனார்மேல் அளவுபடாப் பெருங்காதலன்பு கொண்டு ஆறாராய்நிற்க இருபாலும்ஒத்து நிகழாநின்ற அம்மெய்யன்பு நிகழ்ச்சியைக்கண்டு அவ்விருவரையும் சுந்தரமூர்த்திநாயனார்க்கு உடனே மணம்புரிவித்த வியத்தகு அருள்நிகழ்ச்சியும் இத்தமிழ்நாடு நன்குணருமன்றோ? இம்மெய்வரலாற்றின் நுட்பத்தை உற்றுராயவல்லார்க்கு ஒத்தஇயல்புடைய இருவர்பால்நிகழும் உண்மைக்காதலன்பே இறைவன் திருவுளத்திற்கு இசைந்ததாதல் நன்குபுலனாதலின், அவ்வன்பின்முதிர்ச்சி யுற்றுநின்றாரே இறைவன் திருவடிக்கண்ணும் மெய்யன்புஉடையராய் அதனைத் தலைக்கூடுவரென்பதும், அவ்வன்பில் வழுவாதொழுகிய நன்மங்கையரே கற்பொழுக்கத்தில் தலைநின்றாரவரென்பதும் நன்குபெறப்படும்.

இனி, இக்காதலன்பின்நிலை தெரியாமலும், அதனை ஆராய்ந்துபார்த்து அதற்குஏற்பச்செய்யாமலும் உறவினரும் பெற்றோரும் பிறரும் இருவரைத் தமக்குத்தோன்றியபடி மணம்புகுத்துவதனால் அதில்அகப்பட்ட ஆண்மகன் தன்பெருமைத்

தன்மையும் பெண்மகள் தன்சுற்பின் றன்மையுஞ் சிதையப்பெ றுகின்றனர். அவர்கள் தமக்கிசைந்தாரைப் பெற்றுக்காணுங் காதலன்பின்விளக்கத்தை அறியாமையால், இழிந்தகாமஇன் பமென்னும் இருள்வழிப்பட்டுப் பலதுன்பங்களை உழந்து கடி திற்கூற்றுவனுக்கு இரையாகின்றனர். உயர்ந்ததொன்றைக் காணாதவர்க்கு இழிந்தவற்றில் மாறிமாறி மனஞ்செல்லுதல் இயல்பாதலால், உயர்ந்தகாதலன்பை அறியப்பெறாத மைந்த ரும் மகளிரும் காமவின்பத்திற்பற்றுதலுடையராய் உள்ளம் ஒருவர்பால் நிலையுறப்பெறாமற், பலர்பால் மாறிமாறி ஓடப் பெற்று, அதனால் உடம்பிலும்உயிரிலும்உள்ள வன்மை விரை யக்கெட்டுத், தம்மைப்படைத்த முதல்வனையும் நினையாமல் அவன்கருத்துக்கு மாறுப்நடந்து மாண்டுபோகின்றனர்! ஐ யோ! இறைவனாற் பிறப்பிக்கப்பட்டது எதற்கென அறியாமல் இருளிலுந் துன்பத்திலும் மாண்டுபோகும்மாந்தர் அளவுபடா த இரக்கமுள்ள ஆண்டவன்செய்த அருட்டொழிலை வறிதாக் கினால் இவர் எந்நாளில் உய்வரோ அறிகிலம்!

இனி, இறைவன், மைந்தர்மகளிரைக் காதலன்பின்வழி வைத்து நடத்துதல் எதன்பொருட்டெனின், அதனையுஞ் சிறிது விளக்கிக்காட்டுவாம். ஒருவர்ஒருவரை இன்றியமையா ராய் உயிர்போற் கொண்டொழுகும் உண்மைக்காதலன்பு என் பது இடைவிட்டுப்போகாமல் அவ்வுயிர்களிடத்து எக்காலத் தும் ஒருதொடர்பாய் நிகழ்வதாகலின், எக்காலத்தும் அன்பு ருவாய்நிற்கும் இறைவனியல்போடு அஃது ஒத்ததாக விளங் குவதாம். அவ்வாறு இறைவனியல்போடு ஒத்த அக்காதலன் பிலேயே நினைவுஞ்செயலும் ஈடுபட்ட அவர்கள் செருக்குச் சினம் கவலை வருத்தம்முதலான ஆணவத்தன்மைகள் சிறி தும்இலராய் மனந்தூயராய் இருப்பர். அங்ஙனந் தூயரான அவர்க்குப்பிறக்கும் பிள்ளைகளும் ஆணவத்தன்மைகள் குன் றிப் பேரன்பாற்சிறந்து தூயராய் இறைவன் திருவருளின்பத் தைப்பெறுநிற்பர். எல்லாம்வல்லமுதல்வன் ஆண்பெண்பிறவி களை வகுத்ததெல்லாம், தன்னியல்போடொத்த உயர்ந்தகாத லன்பைத் தோற்றுவித்து, அதனால் அவரைத்தூயராக்கிப், பிற விக்குவாராத உயிர்களையும் அவர்பாற் பிறக்கச்செய்து, தூய

ரான தாய்தந்தையர்சேர்க்கையாற் பிறத்தலின் தாமும்விரை விலே எளிதிற்றூயராகி இங்ஙனமாக எல்லாஉயிர்களும் கடி தில் தனது திருவருளின்பத்தைப் பெறுதற்பொருட்டேயாம். இப்பெருநோக்கம் ஈடேறுதல்குறித்தே, ஒருவர்ஒருவர்மேற் காதலன்புகொள்ளுதற்குவாயிலாக முதலில் அழகையும், அதன் வழியே அறிவையும், அதன்வழியே இனியஇயல்புகளையும், அவர்பாற்றோற்றுவிப்பானாயினன். இவ்வாறெல்லாம் இறைவன் அமைத்திருக்கும் அமைப்புகளின் சிறப்புகளையும் அவற்றின் பயன்களையும் உய்த்துணர்ந்துபாராமல் இவைதம்மையெல்லாம் வெறுஞ்சொல்ளவிலே இகழ்ந்துபேசுவோரும் இவற்றில்வெ றுப்புடையார்போற் காட்டுவோரும் கடவுளின் படைப்பையும் அரும்பெருநோக்கத்தையும்இகழ்வோராயும்வெறுப்போராயும் அறியாமையிற்புகுதலின் அவரெல்லாந் தம் பிறவிப்பயனை இழந் து கடவுளின் திருவருளையும் பெறாராய்ஒழிவர். அழகிலும் அறி விலும் அன்பிலுஞ்சிறந்த ஆண்பெண்பாலார் தத்தமக்கியைந்தா ரோடு பொருந்தவொட்டாமற் சாதி குலம் சமயம் செல்வம் செ ருக்கு உயர்வுமுதலான ஆணவகாரணங்களைக்காட்டிப் புல்லறிவு டையமக்கள் ஒவ்வாதவர்களை ஒருங்குபிணைத்தலால், அங்ஙனம் பிணைக்கப்பட்டவர்கள் கவலையுந் துன்பமுஞ் சினமுமேதம்வாழ் நாள் முடியுமட்டுங்கொண்டு உழலுதலால் அவர்காதலன்பு தினை யளவுங்காணார். இந்தஅல்லல்களுக்கு இடை இடையே ஒருநொ டியிற்றோன்றிப் பின்ஒருநொடியில மறைந்துபோகுங் காமத் தால் அவர்கள் ஒன்றுகூடுதலின் அக்கூட்டத்திற் பிறக்கும் பிள்ளைகளும் இழிந்தஇயல்புகள் உடையராய்த் தத்தம்பிறவிப் பயனைஇழந்து ஆணவத்தொடர்பால் ஓயாமற் பிறவிவட்டத்திற் கிடந்து சுழன்று இறைவனுக்கு ஓயாதவேலையைக் கொடுக்கின் றனர். ஆண்டவனது திருவருள்நோக்கத்திற்கு ஒத்துநடந்து தாமும் விரைவில் தூயராய்த், தம்மிற்பிறக்கும் பிள்ளைகளும் விரைவில்தூயராய் அவனது திருவடிஇன்பத்தைப் பெறுவா ரோ, தாமுந் தூயராகாமற் றம்பிள்ளைகளுந் தூயராகாமல் ஆண வக்கட்டுப்பாடுகளைத் தம்புல்லறிவாற் செய்துகொண்டு உழல் வாரோ எவர் உலகத்திற்கும் உடையானுக்கும் இனியரென்று ஆய்ந்துஆராய்ந்து பார்க்குங்காற் காதலன்பின் றோற்றத்திற்கு

இசைந்த ஒழுகலாறுவாய்ந்தோரே உலகிற்கும் உடையானுக்கும் இனியராவரென்பது நன்குபுலனாகாநிற்கும்.

தமிழ் நாட்டில் முற்காலத் திருந்த நன்மக்கள் தத்தமக்குஒத்தாரோடு பொருந்திக் காதலன்புடையராய் ஒழுகியவரையில் தாமுந் தம்கால்வழி வந்தோரும் எல்லாநலங்களினுஞ்சிறந்து தூயராய் இறைவ னருள்வழி நிற்போராய் நாகரிகத்திற் சிறந்து விளங்கினர். அவ்வுயர்ந்த அன்புக்கு இடந்தராத ஆணவக்கட்டுப்பாடுகளைச் செய்துகொண்டு அவற்றிற்பட்டுழலத் துவங்கிய பிற்றைநாள்முதல் இதுவரையில் அவர் தம்பெருமைகளையும் பெருநலங்களையும் இழந்து அயல் நாடுகளினின்றுவந்த கிரேக்கர் துருக்கர் முதலிய வேற்றினத்தாரால் நெருக்கப்பட்டு அவர்க்குஅடிமைகளாகி வரவரஉயிரற்றபிணம்போல் வெற்றுடல்ஓம்பி மங்கிவருகின்றனர். மேல்புலத்துள்ள வெள்ளைக்காரநன்மக்கள் இத்தகைபகட்டுப்பாடுகள் பெரும்பாலும் இலராய் இறைவன் திருவருணோக்கத்திற்கு ஒத்த காதலன்பினால் ஒருவரோடொருவர் இயைந்து ஒருமித்துவாழ்தலால் தாமும் தம்மக்களும் எல்லாநலங்களினும் நாளுக்குநாள்உயர்ந்து, இந்நிலவுலகையெல்லாந் தமது வெண்கொற்றக்குடைநீழலி லிருத்திச் செங்கோலோச்சி வருகின்றனர். கீழ்நாட்டிலுள்ளநம்மனோர் நாளுக்குநாள் எல்லாவகையிலும் அருகிப்போதலையும், மேல்நாட்டிலுள்ள வெண்மக்கள் நாளுக்குநாள் எல்லா நலங்களிலும் பெருகிவருதலையும் நடுநிலை திறம்பாமல் உற்றுணர்ந்து பார்ப்பதொன்றே நம்மனோர் இறைவன் திருவருணோக்கத்தோடு மாறுபட்டு நடந்து மங்குகின்றனரென்பதையும், வெண்மக்கள் அதற்குஒத்துநடந்து பொங்குகின்றனரென்பதையுந் தெளிவுறக்காட்டுதற்குப் போதுமானதாகும். இவ்வாறு சொல்லுதல்கொண்டு மேல்புலத்து வெண்மக்களே காதலன்பின் ஏற்றத்திற்கு முழுதும்இசைந்த எல்லா ஏற்பாடுகளும் உடையரென்று கொள்ளற்க. அவருள்ளுஞ் சிற்சிலர், உயர்நிலை செல்வம் தொழில் முதலான புல்லியகாரணங்கள்கொண்டு காதலன்புடையார் கணவனும் மனைவியுமாய்ப் பொருந்துதற்கு இடங்கொடாமற், பொருத்தமில்லாதவரைத் தாம் விரும்பியவாறு பிணைத்துவிடு

தலும்உண்டு. என்றாலும், இந்நாவலந்தீவின்கண் உள்ள நம்ம னோரில் எங்கும் பொருந்தாச் சேர்க்கைக்குரிய கட்டுப்பாடு களும் அவற்றைச் செய்துவைப்போரும் மலிந்துகிடத்தல் போல மேல்நாடுகளில் இல்லையென்பதே உண்மை. மேல்நாட் டவர் தம்முள் இடையிடையே யுள்ள போலிக்கட்டுப்பாடுகள் சிலவற்றையுங்கூட வரவர விலக்கிவருகின்றார்கள். ஊன்உண்ட லையும் மயக்கச்சாறுபருகுதலையும் மேல்நாட்டார் நாளுக்குநாள் விடுத்துவருதல்போல, உண்மைக்காதலன்பின் சேர்க்கைக்கு மாறான இடைஞ்சல்களையும் மெல்லமெல்ல விட்டுவருகின்றார் கள். இவைகளையெல்லாம் முற்றும்ஒழித்து அவர்கள் முழு துந்தூயராய் விளங்கும்நாள் விரைவில்வரும்என்பது அவர்கள் இப்போது ஒழுகும் ஒழுகலாற்றினால் நன்கு விளங்குதலால், அவர்கள்மட்டுமே இந்நிலவுலகையெல்லாம் தமது செங்கோ லின் வழிவைத்து, எல்லாரையுஞ்சீர்திருத்தி, எல்லாருந்தமது ஒழுகலாற்றினைக் கைப்பற்றிநடக்குமாறு செய்வரென உய்த்து ணர்கின்றேம். இந்நாவலந்தீவிலுள்ள நம்மனோர் தாமாகவுஞ் சீர்திருந்தாமல், மேல்நாட்டிலுள்ள வெண்மக்களைப் பார்த்தா யினுஞ் சீர்திருந்தாமல், இஞ்ஞான்று உள்ளபடியாகவே இறை வன் திருவுளத்திற்குமாறாக நடந்துவருவராயின், உரமில் லாதபுற் பூண்டுகள் உரமுள்ள புறபூண்டுகளின் பக்கத்தே கிளைத்துவளர மாட்டாமல் தாமாகவே கரிந்து மறைந்துபோ தல்போல இவர்களும் சிலநூற்றாண்டுகளிலே தங் கால்வழி யில் எவருமேஇல்லாதபடி மாண்டு மறைந்துபோவரென்பது திண்ணம். எப்படியாகவேனும் உயிர்களைத்திருத்தி அவர் களைத் தனது திருவடிப்பேரின்பத்தின்கட் சேர்ப்பித்தலிலே யே அருள்சுரந்து நிற்கும் இறைவன், அங்ஙனஞ் சிறிதுந் திருந்ாது மாண்டொழியும் நம்மனோரைப், பெரிதுந்திருந் திப்பெருகும் மேல்நாட்டு வெண்மக்களுக்குப் பிள்ளைகளாகப் பிறப்பித்து, அவ்வழியால் அவர்களை மேல்நிலைக்குஉயர்த்துவா னென்பதுந்திண்ணம். இப்போது மேல்நாட்டு வெண்மக்க ளையும் அவர்தம் ஒழுகலாறுகளையும் இகழ்ந்து எள்ளனஞ்செய்யும் நம்மனோர், அவர்கட்குப் பிள்ளைகளாய்ப்பிறக்கும் அப்போது அவர்களையும் அவர்கள் ஒழுகலாறுகளையுஞ் சிறந்தெடுத்துப்

பாராட்டி ஒழுகுவாராதலால், அழிக்கும்ஆற்றலும் படைக்கும்ஆற்றலும் உடைய முதல்வன் தான்வேண்டியவாறு உயிர்களைப்பிறவிகளிற் செலுத்தவல்லனாய் நிற்பதையும், அவனது பெருவல்லமைக்குமுன் நம்மனோரது செயலெல்லாம் ஏதொரு திறமுமின்றி நிற்பதையும் நன்கு ஆழ்ந்து நினைத்துப்பார்த்துத், தெய்வத்தின்கட்டளையாற் காதலன்பு கொளப்பெற்றாரை அவர்வழியேவிடுத்து அதற்கேற்றமுறைகளை வகுத்தலே ஆண்பெண்பாலார் வாழ்க்கை தூயதுஆதற்கும், அவர்நீண்டகாலம் இன்பவாழ்க்கையில் வாழ்ந்து தூயரானமக்களைப்பெற்று இறைவன்திருவருள் நோக்கத்தை ஈடேற்றி அவனதுபேரின்பத்தை விரைவில்எய்தற்கும் வழியாம்என்று கடைப்பிடிக்க.

அற்றேல், ஆண்பாலாரில் உயர்ந்தோரும் பெண்பாலாரில் உயர்ந்தோருங் காதலன்பாற் கூடிவாழும் வாழ்க்கையே சிறந்ததெனின், மற்றை உயர்ந்தோரல்லாதாரும் இழிந்தாருங் காதலன்புடையராய் மருவிவாழுமாறு யாங்ஙனமெனின்; உயர்ந்தோரல்லாதாரினும் இழிந்தோரினும் ஆண்பெண்பாலார் உளராகலின் அவ்வவர்க்குள் ஒத்தஇயல்புடையார் ஒருவர்மேல் ஒருவர் அன்புமீதூரப்பெற்றுக் கணவனும்மனைவியுமாய் வாழ்தற்குரியரென்க. இஃது

"அடியோர் பாங்கினும் வினைவல பாங்கினுங்
கடிவரை இல புறத் தென்மனார் புலவர்" என்று ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியவாற்றானும், இழிந்தோர்க்குள் நிகழும் அன்பின்முறைகளையும் உடன்எடுத்துப்பாடிய கலித்தொகைப்பாட்டுக்களானும் இனிதுபெறப்படும். அங்ஙனமாயின், உயர்ந்தோர்க்குரிய காதலன்பின்தன்மைக்கும், அவரல்லாத பிறர்க்குரிய அன்பின்தன்மைக்கும் வேறுபாடு என்னையெனின்; உயர்ந்தோர்க்குக் கல்வியும் அறிவும் அழகும் செல்வமும் மிகுந்திருத்தலால் அவற்றிற்குஏற்ப அவர்பால்நிகழுங் காதலன்பும் சாலவுந்தூயதாய் அளவற்றசிறப்பினதாய் இருக்கும். மற்று அவரல்லாதபிறர்க்குக் கல்வியும் அறிவும் அழகும் செல்வமும் வாயாமையால் அவர்தமக்குள் அத்தூயகாதலன்பு அவ்வளவினதாகத் தோன்றப்பெறுதல் இயலாததேயாம். என்றாலும், அவருள்ளும் ஒத்தஇயல்புடையார் உண்மையன்பு

கொள்ளப்பெறுங்கால், அவர்க்குள்ள இழிந்தஇயல்புகள் ஒடுங்கிப்போக, அவரும் நாள்வழியே தூயராய்ஒழுகி, மேற்பிறவிகளிற்சென்று பிறந்து உயர்ந்தகாதலன்பு தோன்றப்பெற்று முழுதுந்தூயராவரென்று உணர்தல்வேண்டும்.

இனி, மேலேகூறியனவெல்லாங் கொள்கையளவிலே உண்மையேயாயினும், இவைதம்மை இஞ்ஞான்றுள்ள மக்களுள் வழங்குமாறுசெய்வித்து, இவரையெல்லாஞ் சீர்திருத்துமாறு எங்ஙனமெனின்; கல்வியும் அறிவுஞ் செல்வமுமுள்ளவர்கள் ஊக்கமுந் துணிவும் உடையவர்களாய் மேற்கூறியகொள்கைகளை வழக்கத்திற் கொண்டுவருதற்குப் பெரிது முயன்றுதாமே அவைகளின்படி முன்நடந்துகாட்டுதல் வேண்டும். குற்றமுள்ளதோ இல்லதோ வழக்கமாயுள்ளதொன்றனை மாற்றப் புகுந்தால், அதிற்புகுவாரைப் புறம்பழித்துத் துன்புறுத்த முன்நிற்பது மக்கள்இயற்கை. ஆயினும், அப்புறம்பழிப்புரைக்குந் துன்பத்திற்கும் அஞ்சிப் பின்வாங்காமல் முயன்று தம்முடைய கொள்கைகளை வழக்கத்திற்குக் கொண்டுவந்து நிறைவேற்றினால், பிறகு அங்ஙனம் செய்தாரைப் புகழ்ந்து கொண்டாடி அவரைத்தெய்வமேபோற்கருதி வணங்குவதும் மக்களியற்கையாக இருக்கின்றது. மேல்நாட்டவர்களுள் இத்தகைய சீர்திருத்தங்களை நிலைநாட்டமுயன்ற பெரியோர்களிற் பலர் பிறராற்பழித்துத் துன்புறுத்தப்பட்டார்கள்; பலர் நெருப்பிலிட்டுக் கொளுத்தப்பட்டார்கள்; பலர் கற்களால் அடிக்கப்பட்டு இறந்தார்கள்; பலர் உயிரோடு தோலுரிக்கப்பட்டார்கள்; பலர் தூக்கிடப்பட்டார்கள்; பலர் வெட்டப்பட்டார்கள்; பலர் சிலுவையில் அறையப்பட்டார்கள். இன்னும் முன்னாளில் மக்களைச் சீர்திருத்தமுயன்ற பெரியோர்கள் பட்டபாடுகளையெல்லாம் எடுத்துரைக்கப்புகுந்தால் ஏடு இடங்கொள்ளாது. அவ்வாறெல்லாம் அவர்கள் துன்புற்றுச்செய்த சீர்திருத்தங்களால் இன்பமெய்தி நன்றாய் வாழ்த்துவங்கியபின் அப்பெரியாரைப் பிற்காலத்து மக்களெல்லாம் தெய்வமாவைத்து வழிபாடாற்றி வருகின்றனர். ஆதலாற் பிறர்கூறும் பழிப்புரைக்கும் அவர்செய்யுந் துன்பங்களுக்கும் அஞ்சிச் சிறிதும் பின்வாங்காமல், மேலேகாட்டியபடி காதலன்பின்தோற்றத்திற்கும்,

அதனல் மக்கள் தூயராய் இறைவன் திருவருணெறி நின்று அவன் திருவடிப்பேரின்பத்தினைப் பெறுதற்கும், இவற்றிற் கெல்லாம் பெருந்தடையாய்நிற்கும் சாதி குலம் செருக்குச் செல்வம் நிலை அறியாமை என்னும் இவைகளையெல்லாம் தகர்த் தெறிதற்கும் இயைந்தஏற்பாடுகளை அறிவும் முயறசியும் நற் பொருளும்உடையார் விரைந்துமுயலல் வேண்டும். இவைகளை விரைந்துசெய்யாமல் நம்மனேர் இன்னுந் தூங்கிக்கிடப்பாரா ஞல் இவரெல்லாங் கால்வழியின்றிச் சில நூற்றுண்டுகளில் மாண்டுமறைந்துபோதல் திண்ணம்.

இனி, நம்மனேரைச் சீர்திருத்தவேண்டிய ஒழுகலாறு கள் எவ்வெவைஎனிற் கூறுதும். ஆண்மக்களைக் கல்வியிற் பயிற்றிவருதல்போலவே, பெண்மக்களையுங் கல்லூரிகளுக்குச் செல்லவிடுத்து உயர்ந்தகல்வியினை அவர்கள்பெறுமாறு செய் தல் இன்றியமையாது முதவிற் செயற்பாலதாம். பெண்பிள் ளைகளைக் கல்வியிற்பயிற்றுமலும், சிறிதுபயிற்றினும் அவர்கள் மங்கைப்பருவமெய்திய பன்னிரண்டாண்டுமுதல் சிறைச்சா லையில் அடைத்துவைப்பதுபோல் வீட்டில் அடைத்துவைத்து, மணஞ்செய்தற்கு வந்துகேட்கும் பற்பலரிடமும் இவ்வளவு பணந்தந்தாற் பெண்ணைக் கொடுப்போம் என்று விலைபேசிக், கடைசியாக எவர் மிகுதியான பணங்கொடுக்க உடன்படுகின் றரோ, அவர் கல்லாதவராயினும், அறிவிலியாயினும், அழ கிருந்தமூலையிற் குடியிருந்து அறியாராயினும், அப்பெண்ணுக் குத் தந்தையோ பாட்டனே என்று பலருங் கருதத்தக்கபடி நரைத்துத்திரைத்துப் பழுத்து மிகமூத்தோராயினும் அவர்க்கு விற்றுவிடுதல்போல் அவரைக்கொண்டு அவள்கழுத்திற் றாலி யைக்கட்டி வீட்டைவிட்டுச் சுடலைக்கு அனுப்புவதுபோல் அச் சிறுபெண்ணை அவளைவிலைகொண்டவன்வீட்டுக்கு அனுப்புத லினும் பெருந்தீவினை இவ்வுலகத்தில்உளதோ சொல்லுமின்! தனதுநிலைமையை அறியும்அறிவும், தான்உலகவாழ்க்கையின் இடைநின்று நடக்கவேண்டியமுறையுஞ் சிறிதும்பகுத்துணர் தற்கில்லாத ஏழைச்சிறுமியை இங்ஙனம்விலைபேசித் தொலைத் துவிடும் பெற்றூர்உற்றூர்க்கும், ஆடுமாடுகளைவளர்த்து, அவற் றை மிகுந்தவிலைபேசிக் கொள்ளும் இறைச்சிக்கடைக்காரர்க்கு

விற்று அவைதம்மைக் கொலைசெய்விப்பார்க்கும் ஏதேனும் வேற்றுமைஉண்டோ புகலுமின்! இனி, எம்மகளைமணஞ்செய்வார்க்கு இத்துணைபொருள் தருவேம்என மணமகனை விலைபேசிவாங்கி, அவன் தன்அறிவுப்படி நடக்கவொட்டாது, மாமன் மாமி மனைவிஎன்னுந் தம்விருப்பப்படியெல்லாம் நடக்குமாறுஏவி, அவனை மதிப்புக்குறைச்சலாய் நடத்தி, அதனால் அவன் தன்மனைவியிடத்தும் அவளுக்குப் பெற்றார் உற்றாராயிருப்பவரிடத்தும் அன்பிலனாய் அடங்கிஒடுங்கி அச்சத்தோடும் அறிவுகுன்றிஒழுக, அவன்மனைவியும் தன்தாய்தந்தையர் ஈந்தபொருளுக்கு ஆவலுற்று வந்தவன்றானேயென்று அவனிடத்து அன்பிலளாய் அவனைஇகழ்ந்துஒழுக இவ்வாறு அவ்விருவரையும் இன்பமில்லாத துன்பவாழ்க்கையிற் பூட்டிவைப்போர் அவ்விருவர்க்கும் பொல்லாப் பகைவரேயாவரல்லது பெற்றாரும் உற்றாரும் ஆவரோசொல்லுமின்! இங்ஙனமெல்லாம் வலிந்து பூட்டிவைக்கும் வல்வாழ்க்கையால் வருந்தீங்குகள் இதில்தொடர்புடையார்மட்டில் ஒழியாமல், இவர்கள் வயிற்றிற்பிறக்கும் பிள்ளைகட்கும், அப்பிள்ளைகளின் பிள்ளைகளுக்குமாக எல்லாரையும் நீளத்தொடர்ந்துபற்றி ஒருநூற்றாண்டிற்குள் அவர்களின்கால்வழியே இல்லாதபடி துடைத்துவிடுகின்றன! ஆகையாற், குழந்தைபிறந்தவுடனே மாப்பிள்ளையையோ பெண்ணையோதேடி மணபுரியுந் தீவினையைப்பற்றிப் பேசாமல், அவர்களைக் கல்வியிலும் அன்பிலும் அறிவிலும் அழகிலும் பிறநலங்களிலும் வளரச்செய்யும் வழிவகைகளைத் தீரத்தெளிந்து தம்மக்களை எல்லாப்படியாலும் மேம்படச்செய்தலிலேயே ஈன்றோரும் அவரைச்சேர்ந்தோருந் தங்கருத்தைச் செலுத்தல் வேண்டும்.

இனி, அவர்கள் உலகவாழ்க்கையின் இயல்புகளையும் அதிலுள்ள நன்மைதீமைகளையும். நன்குணர்ந்து, தீமையைவிலக்கி நன்மையைக்கைக்கொண்டு, தம்மைப்பாதுகாத்துப், பலர்க்கும் பயன்படஒழுகும் வழிதுறைகளை நன்குணர்ந்த இளைஞரானபின், அவர்களைப் புல்லியகட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தாமல், அவர்கள்தாராளமாய் உலவிவருதற்கு இடங்கொடுத்தல்வேண்டும். ஆனாலும், பெண்மக்கள் மெல்லிய

இயல்பு உள்ளவர்களாதலால் அவர்களைத் தாராளமாக இயங்க விடுதலில்மட்டுஞ் சிலஒழுங்குகளை அவர்களுக்கு நெருக்கம் உண்டாகாதபடிசெய்தல் இன்றியமையாததேயாகும். இளம் பருவத்து ஆண்மக்களும் பெண்மக்களும் சிற்சில நெருக்கமில்லாவரையறைகளோடுந் தாராளமாக உலகில்இயங்கிவர இடங்கொடுத்தால், அவர்கள் தத்தமக்கு இசைந்தவர்களைத்தெரிந்து ஒருவர்மேல்ஒருவர் காதலன்புகொள்ளப் பெறுவர். அங்ஙனம் அன்பு கொள்ளப்பெற்றவர்களை அவர்கட்குப்பெற்றாரும் நண்பரும் ஆவார் தெரிந்து மணம்புரிவித்து இல்வாழ்க்கையில் நிலைப்பித்தல்வேண்டும். இனி, அவ்வாறு அன்புகொள்ளப் பெற்ற இளைஞருள் ஒருவரையொருவர்அறியாத பெருங்குற்றங்குறைபாடுகள் இருக்குமாயின், அவற்றையறிந்து, அவர்கட்குஅறிவித்து அவர்தம்மை விழிப்பாயிருக்கச்செய்வதும் அவர்தம்பெற்றார்க்கும் நண்பர்க்கும் இன்றியமையாக்கடமையாம்என்பதனையும் ஈண்டுவற்புறுத்துகின்றும். ஆனாலும், சாதி குலம் செருக்கு செல்வம் நிலைமைமுதலிய போலிக்காரணங்களை முன்னிட்டு அவர்தமக்குள்விளைந்த காதலன்பினைப் பழுதாக்குதல் எவர்க்கும்நன்றாகாது; மற்றுக், கல்வி அன்பு அறிவு அழகு இயற்கைமுதலான உண்மைக்காரணங்களிற் குறைபாடு உண்டாயின், அதனைஎடுத்துக்காட்டி அவர்தம்மை விழிப்பாயிருக்கச்செய்தல் பெற்றாரும் மற்றாருமாகிய எவர்க்கும் இன்றியமையாக் கடமையேயாகும்.

இனி, மனையாளை இழந்தவன் இளைஞனாயிருந்தாலும், பலமுறைமணம்புரிந்து மனையாளையிழந்தோ இழவாமலோ ஆண்டில் மிகமுதிர்ந்தவனாயிருந்தாலும் அவ்விருவரும் விரும்புகிறபடியெல்லாஞ் சின்னஞ்சிறுபெண்களை அவர்கட்கு அடுத்தடுத்து மணஞ்செய்விப்பதில் எவருங் குற்றங்காணுதபோது, ஒன்றுமறியாப் பேதைச்சிறுமிகள் தாம் ஏதும்அறியாச்சிறுபருவத்தே பெற்றார் உற்றாரால் மணம்புகுத்தப்பட்டுச் சிலநாளிலோ அன்றிச் சிலதிங்களிலோ அல்லது சிலஆண்டுகளிலோ கொண்டானைக் கூற்றுவனுக்குக் கொடுத்துவிட்டபின், திரும்ப அச்சிறுமிகள் மணஞ்செய்து கொள்வதைமட்டுங் குற்றமாக நினைதல் நம்மனோர்க்கு ஈரமில்லாக் கொடுநெஞ்சம் உண்மை

யைக்காட்டுகின்றதன்றோ? ஒருகால் மணஞ்செய்விக்கப்பட்ட மங்கையர் தங் கொண்டானை இழந்தபின் மறுபடியும் மணஞ் செய்துகொள்ளவிரும்பினல், அவர்கள் அவ்வாறே செய்து கொள்ளுமாறு இடந்தருதல்வேண்டும். அவ்வாறு செய்யாமல் அவர்கள் தலையை மொட்டைஅடித்தும், வெள்ளைப் புடைவை உடுப்பித்தும், அணிகலங்கள்பூணுமல் தடுத்தும் அவ்விளம்பெண்களைச் சிரழித்து வைப்பதனாலேயே அவர்களைக் கற்பொழுக்கத்தில் நிலைபெறச்செய்துவிடலாம் என்று நம்மனோர் கொண்டஎண்ணம் பெருந்தவறுதலாகவே முடிதலை ஆங்காங்கு நீளக் கண்டுவருகின்றோம்; இத்தகைய கொடியகட்டுப்பாடுகளாற் கருச்சிதைத்தல் தற்கொலைபுரிதல் முதலான அறக்கொடியதீவினைகள் நமதுநாட்டின்கட் பெருகிவரக் காண்கின்றோம். உண்மையைஉள்ளவாறே ஆராய்ந்துகாணும் ஈரநெஞ்சமுள்ள சான்றோர்களும் இத்தீவினைகளையும், இவற்றிற்கு ஆளாக்கப்படும் ஏழையிளம்பெண்களின் இரங்கத்தக்கநிலைகளையும் நினைந்துநினைந்து, ‘இத்தமிழ்நாடு இத்தீவினையினின்று மீளுநாள் எந்நாள்! எந்நாள்’ என்றுஇரங்கி உருகாநின்றார்! பல்லுஞ்சொல்லும்போய்க், காடு வா வா என்ன வீடு போ போ என்ன ஆண்டில்மிகமுதிர்ந்த முதியோரும் ஆறுந்தாரமாக ஆறுஆண்டுள்ள ஏழைச்சிறுமியை மணக்க அடங்காப்பேரவாக் கொண்டிருக்கையிற், கட்டிளமையிற்சிறந்து திகழும் இளையமங்கையர்க்கு இன்பத்தில் விருப்பம்இல்லாமல் இருக்குமா! மிகச்சிறிய ஈ எறும்புமுதல் மக்கள் தேவரீறான எல்லாஉயிர்கட்கும் இன்பநுகர்ச்சியில் இயல்பாகவே வேட்கைஇருக்கையில ஏழைச்சிறுபெண்கள்மட்டும் அஃதுஇல்லாதிருக்கவேண்டுமென்று கட்டுப்பாடுசெய்து அவர்களை வாழ்நாள்எல்லாம் வருந்தச்செய்வது தெய்வத்திற்கு அடுக்குமா! எல்லாஅவாக்களையும் முழுதும்அறுத்தேம் என்றுசொல்லி, உணவின்றி என்புஎழுந்து ஊன்உலர்ந்த உடம்பினையுடைய அருந்தவத்தோர்களும் தமதுமனநிறையழிந்து தம்மினும் மிக இழிந்தமாதரையும் விரும்பிச்சென்ற பழையவரலாறுகள் பல உளவல்லவோ! எத்துணையாண்மையுடையோரும் எத்துணையறிவுடையோரும் எத்துணையடக்கமுடையோரும் எத்துணை

ஒழுக்கமுள்ளோரும் எத்துணையுலகைவெறுத்தோரும் ஆண் பாலரேனும் பெண்பாலரேனும் தம்மால்விரும்பத்தக்காரைக் கண்டவிடத்து எல்லாவற்றையும் மறந்து அவர்மேற் பெரு விருப்புடையராய் மறைவாகவோ வெளிப்படையாகவோ அவ ரைக்கூடுதற்கேற்ற முயற்சிகளைச்செய்து இன்பந்துய்க்கின் றனர். தாங்கொண்ட இன்பவேட்கை பிறர் அறியாவாறு மறைக்கவும், அதனைப் பிறர்க்குத்தெரியாமல் நிறைவேற்ற வும்வல்ல அறிவும் செல்வமும் திறமையும் உடையவர்கள் பிறரால் இகழப்படாமல் தங்கருத்தின்படிநடந்து, 'முற்றத் துறந்தவர், பற்றுவிட்டவர்' என்னும் நன்குமதிப்பையும் பெ றுகின்றார்கள். தமதுவிருப்பத்தை நிறைவேற்றத்தக்க நிலை மைகள் வாயாதவர்கள் பிறர்பால் இகழ்ச்சியினையும் மதிப்புக் குறைச்சலினையும் அடைகின்றார்கள். முடிவாக ஆராய்ந்து பார்க்குங்கால், இகழ்வார் இகழப்படுவார், புகழ்வார் புகழப்படு வார்முதலான எத்திறத்தவரும் இவ்இன்பவேட்கையைக் கடந் தவர் அல்லர். இன்பவிருப்பென்பது எல்லா உயிர்களோடும் பிணைந்திருப்பதாகும். இன்பத்தைவிட்டு உயிரும், உயிரை விட்டு இன்பமும் பிரிந்திருப்பனவல்ல. ஒன்றைவிட்டால் மற் றொன்று தனித்திராமல் உடனே அழிந்துபடும். இகழ் புகழ் முதலிய வெளிமினுக்குகளுக்கு மேலேகாணப்படாமல், அவற் றின்பிடிக்கு அகப்படாமல் உயிர்களின் உள்ளத்தின்உள்ளே ஒளிர்ந்துகொண்டு அவ்வுயிர்களை மேன்மேல் முயற்சிகளிற் கிளரச்செய்துகொண்டு நிற்கும் ஆற்றல்வாய்ந்தது அவ்வின்பம் என்று ஆழநினைந்துபார்த்து அறிதல்வேண்டும். இவ்வாறு உயிர்களின் உண்மைஇயற்கையை ஆராய்ந்துபார்ப்பவர்க் கல் லாமற், பிறர்க்கு ஆண்பெண்களைப் பொருந்தச்சேர்த்தலின் சிறப்பு விளங்காது. தாம் காமவேட்கையில் முதல்வராய் நின்று கொண்டே தமதுநிலையையுணராமற், பிறரைமட்டும்இகழ்ந்து கொண்டுசெல்பவர் உலகத்துக்கும் உலகினைவகுத்த இறைவற் கும் மாறாகநடந்து தம்மையும் பிறரையும் பெருந்துன்பத்திற்கு ஆளாக்கிஒழிவர். மக்களியற்கையைக் கூர்ந்து ஆராய்ந்துபார்ப் பவர்கள் ஆண்பாலார்க்கு இன்பவேட்கை யிருத்தல்போலவே, பெண்பாலார்க்கும் அஃது இருக்குமென நன்குணர்ந்து மணஞ்

தமிழ்நாடு

செய்து கணவனையிழந்தமகளிரை மறுபடியும்மணஞ்செய்வித்துக்கொடுத்து, அவரைமணம் இன்றிவைத்தலால்வரும் பெருந்தீமைகளை ஒழித்துவருகின்றனர். இந்நாவலந்தீவின்கண் வடநாடுகளினும், மலையாளத்தினும், யாழ்ப்பாணத்தினும் உள்ள நம் இந்து நன்மக்கள் ஒருமுறை மணம்புரிந்து கணவரை இழந்தமகளிர்க்கு மறுமுறையும் மணம்நடத்தி அவரை வாழ்க்கைப்படுத்தக் காண்டலால், இவ்வாறுசெய்யும் வழக்கம் நமக்குப் புறம்பானது அன்றென்பதும், அது பண்டைக்காலந் தொட்டு நம்மனோர்க்குள் நடைபெற்றுவருவ தொன்றேயாமென்பதும், இச் சிறந்தவழக்கம் பிற்காலத்துவந்த தந்நலம் பாராட்டும் இரக்கமில்லாச் செருக்குடைய சிலரால் மாற்றப்பட்டுச் சோழநாடு பாண்டிநாடுகளில் நிலைபெறாயிற்றென்பதும் நன்கு விளங்காநிற்கும். மாதரை மறுமுறையும் மணம் புரிவிக்கும் முறை, பண்டைக்காலத்தில் இந்நாவலந் தீவெங்கும் பரவியிருந்ததென்பது பழைய ஆரிய வேதங்களினும் மிருதி நூல்களினும் புராண இதிகாசங்களினுந் தெளிவாகச் சொல்லப்பட் டிருக்கின்றது. இதற்குச்சான்றாக அந்நூல்களிலிருந்து சில மேற்கோள்களை இங்கெடுத்துக் காட்டுகின்றாம்.

எசுர்வேத தைத்திரிய ஆரணியகம், ஆறாம்பிரபாடகம், பதினான்காம் செய்யுளில் "இதோ உயிரிழந்துகிடக்கும் நின்கணவன் பக்கத்திற் படுத்துக்கிடக்கும் ஓ மாதே எழுந்திரு, நின்னைச்சூழ்ந்து இங்கே உயிரோடிருக்கும் இக்கூட்டத்தினரிடம் வந்து, கைப்பெண்ணைத் திரும்ப மணஞ்செய்துகொள்ள விரும்பும் ஒருவற்கு மனைவியாகுக!" என்று சொல்லப்பட்டமை பெண்மக்கள் பண்டைநாளில் மறுமணங் கூடினதனைத் தெளிவுறக் காட்டுகின்றதன்றோ?

இனி இருக்குவேதத்திற் (எ, அ, கஅ) போந்த "ஓ அசுவினிகுமார, இரவில் நீ எங்கே தங்குகின்றாய்? பகலில் எங்கே தங்குகின்றாய்? நீ எங்கே உறைகின்றாய்? ஒரு கைம்பெண் தன் இரண்டாங் கணவனுக்குக் கவர்ச்சியை உண்டுபண்ணுதல் போலவும், ஒருமனைவி தன்கணவன் தனதுபடுக்கையில் வந்திருக்கும்படி அவனுக்குக் கவர்ச்சியை விளைத்தல்போலவும் எந்த வேள்வியாசிரியன் அவிகொடுத்தலால் வேள்விக்கண்ணே

தின்னைவரவழைக்கின்றான்?" என்னும் மந்திரவுரை ஒருகைம் பெண் திரும்பவும் ஒருவனை மணங்கூடிவாழும் வாழ்க்கை எல்லார்க்கும் ஏற்புடைத்தாதலைக் காட்டுகின்றதன்றோ?

இனி, அதர்வவேதத்திற் (கூ, ரு, உஎ) போந்த "முதலில் ஒரு கணவனை மணந்தவள் பின்னரும் இரண்டாங் கணவனாக மற்றொருவனை மணக்கின்றாள்; ஆனால், அவ்விருவரும் அஜ பஞ்சோதனங்கொடுத்துப் பிரியாதிருக்கவேண்டும்" என்னும் மந்திரவுரை மங்கையர் மறுமணத்தைக் கட்டளையிடுவதோடு, "ஒருவகை அவியாகிய பஞ்சோதனத்தைத் தருகுவனாயின், இன்னும் மற்ற அவிகளைக் கதிரவனுக்குத் தருகுவனாயின், இரண்டாங்கணவன் தான் இரண்டாம்முறை மணந்துகொண்ட மனைவியோடும் துறக்க உலகத்தில் அதே இடத்திற்குச் செல்கின்றான்." என்னும் மந்திரமும் (கூ, உ, உஅ) அது நல்வினையாய்ப் பின்னர் அவரைத் துறக்கத்திற்குச் செலுத்துமாறும் நன்கெடுத்துக் காட்டுகின்றது.

இனி, நாகமன்னன் புதல்வியான உலூபி என்பவள் முதலில் மணந்தகணவனை இழந்தபின், தன்தந்தையால் அருச்சுனனுக்கு மனைவியாய் இரண்டாம்முறை மணஞ்செய்விக்கப்பட்ட வரலாறு மாபாரதத்தின்கட் சொல்லப்பட்டிருத்தலின், மறுமுறை மணம் அக்காலத்தில் யாவரானுங் கைக்கொள்ளப்பட்ட தன்மை ஐயுறவின்றித் துணியப்படும்.

இவ்வாறு பண்டைநாளில் இந்நாவலந் தீவெங்கும் பரவியிருந்ததும், இஞ்ஞான்றும் இத்தீவின் சிற்சில பகுதிகளில் தவிர ஏனைப் பெரும்பகுதிகளிற் பரவியிருப்பதும், இவ்விந்து நாடல்லாத ஏனைப்புறநாடுகள் எங்கணும் பண்டும் இன்றும் பரவிக் காணப்படுவதுமாகிய மாதர் மறுமுறை மணத்தை மறுபடியும் இத்தென்றமிழ் நாட்டவர் வழக்கத்திற்குக் கொண்டு வருகுவராயின், அதனாற் பலகொடுந்தீவினைகள் நீங்கப்பெற்று, எல்லாரும் நீண்டகாலம் இனிதாக உயிர்வாழ்வார்கள். ஆண்பாலரைப்போலவே இறைவனாற் படைக்கப்பெற்ற பெண்பாலரும் எந்நேரமும் எக்காலுங் கண்ணீருங் கம்பலையுமாய்த் தாம் துன்புறுவதோடு, தமது துன்பத்தை உலகெங்கணும் பரப்பி வருந் துன்பவாழ்க்கையை ஒழித்து இன்பவாழ்வில் அமர்வர்.

அதனால், எல்லாரும் இன்புற்று, இன்பவுருவாய் விளங்கும் முதல்வன் திருவடியைத் தலைக்கூடுவர்.

இனிப், பொருத்தமில்லாத வகையாய் மணம்பூட்டப்பட்டுப் பாம்புங் கீரியும்போல் ஒருவரையொருவர் பகைத்துப் பேரல்லலிற்பட்டு உழலுங் கணவனையும் மனைவியையும், புறத்துள்ள பரத்தையர்பாற் பெருவிருப்புவைத்துத் தன் மனையாளைக் கொடுமையாய் நடத்திவரும் ஆடவனையும், சூது கட்குடி முதலியவற்றான் மிகமயங்கித் தன் மனைவியை எந்நேரமும் பெருந்துன்பத்தில் ஆழ்த்துங் கொடியனையும், செவ்வனே ஒருவரையொருவர் ஆராய்ந்துபாராமற் பிழைபட அன்புவைத்து மணங்கூடியபின் ஒருவர் இயற்கை மற்றவர்க்குப் பிடியாமல் மிக அருவருத்து வருவோரையும் ஒருங்கிருந்து காலங்கழிக்கச்செய்வதால் அவர் தமக்கேனும் பிறர்க்கேனும் ஏதொரு பயனும் விளையாமையோடு, உலகில் துன்பமும் துன்பவாழ்க்கையுமே மேன்மேற் கிளைத்தற்கு இடஞ்செய்வதால், அவரை வேறுவேறு பிரித்து அவரவர்க்கு இசைவானவருடன் திரும்பவும் மணம்பொருத்துதல் நன்று. ஏறுக்குமாறுப் மணங்கூடிய இருவரை அக்கூட்டரவினின்றும் வேறுபிரித்து, மறுபடியும் அவர்களை இயைபானவரோடு மணம்புணர்த்தும் வழக்கம் பண்டைநாளில் இருந்ததென்பதூஉம், அது மனு முதலான மிருதி நூல்களானுந் தழுவப்பட்டிருக்கின்றதென்பதூஉம் நம்மனோர் கருத்திற்பதித்து, அதனை இந்நாளிலும் நம்மனோர்க்குள் வழக்கத்திற்குக் கொண்டுவருதல்வேண்டும்.

"வெளியூர்க்குப்போன தன்கணவனைப்பற்றி நீண்டநாள் வரையில் ஏதொருசெய்தியும் எட்டாதவிடத்தும், தன்கணவன் இறந்துபட்டவிடத்தும், தன்கணவன் பற்றற்ற துறவியாய்த் தன்னைவிட்டு நீங்கினவிடத்தும், தன்கணவன் ஆண்டன்மை இழந்து அலியானவிடத்தும், கடைசியாய்த் தன்கணவன் கழுவப்படாத ஐம்பெருந் தீவினைகளைச்செய்து கீழ்மகன் ஆகிய விடத்தும் இவ் வைம்பெருந் துன்பங்களில் ஒருபெண் வேறொரு கணவனை மணந்துகொள்ளலாமென்று மிருதிநூல்கள் கட்டளையிடுகின்றன." என்று மனுமிருதி கூறுகின்றது.

"நால்வேறுவகைப்பட்ட அலிகளுள் தன்கணவன் ஒருவனாகிய விடத்து அவனோடு புணர்ந்திருந்தாலுங்கூட அவன் மனைவிமார் அவனைவிட்டுப் பிரிந்துவிடலாம்" என்றும், "அஷுிப்தன், மோகபீஜன் என்னும் வேறிருவகையான அலிகளுள் தன்கணவன் சேர்ந்தவனாயிருந்தால், ஆறு திங்கள்வரையிற் பார்த்துவிட்டு அவன்மனைவிமார் அவனைப் புணர்ந்திருந்தாலுங் கூட அவனைவிட்டு வேறொருவனை மணந்து கொள்ளலாம். இனித், தன் மனையாள் அல்லாத வேறுபெண்களைக் கண்டால் மட்டுங் காமங்கொள்கின்ற ஏழாவதுவகையான அலியைச் சேர்ந்தவனாயிருந்தால், மனையாள் வேறொருவனை மணம்புரிந்து கொள்ளல்வேண்டும்" என்று நாரதமிருதி நுவலுகின்றது.

"இழிந்த இனத்தினின்று வந்தவனாயிருந்தால், தீய இயற்கையுடையவனாயிருந்தால், அலியாக இருந்தால், கீழ்மகனாய் இருந்தால், முயலகன் என்னுங் காக்காவலியுடையனா யிருந்தால், நோயாளியாயிருந்தால், கூத்தாடுவோனாயிருந்தால், ஒரே கோத்திரத்தானாய் வகுப்பானாயிருந்தால், இவ் வெல்லாவகைகளிலும் ஒருபெண்மகள் மணஞ்செய்து கொடுக்கப்பட்டவளாயிருந்தாலும் அவளை வேறுபிரித்துத் திரும்பவும் மணஞ்செய்வித்தல்வேண்டும்" என்று வசிட்டமிருதி கட்டளை தருகின்றது.

இன்னும் இங்ஙனமே மறுமுறை மணத்தை ஏற்றுக்கொண்டு கூறும் பழைய நூல்களின் மேற்கோள்களையெல்லாம் இங்கெடுத்துக்காட்டப் புகுந்தால் இது மிகவிரியுமாதலால், மேலேகாட்டப்பட்டவை தம்மால் அது சான்றோர்க்கெல்லாம் உடன்பாடானதென்று உணர்ந்துகொள்க. ஆண்பாலாரைப் போலவே பெண்பாலாரும் எல்லாஉரிமைகளும்பெற்று இனிது வாழுமாறு அத்துணை இரக்கத்தோடும் அருளோடும் அவர்கட்கு மறுமுறை மணத்தைச் செய்துவைத்தும், அதனைச் செய்யுமாறு கட்டளையிட்டுவைத்தும் தீவினை நிகழ்ச்சிக்கு இடமில்லாத ஏற்பாடுகளை அமைத்துவைத்த மேலோரின் கால்வழியில் வந்தோரென்றுமட்டுந் தம்மைப் புகழ்ந்துபேசிக்கொண்டு, அவர்க்குள்ள இரக்கமும் ஈரநெஞ்சமும் இல்லாமற் பெண்மக்களை அறக்கொடிய கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தி ஆண்மக்களாகிய தாம்மட்டும் நெறிதப்பி வேண்டியவாறெல்லாம் நடந்து

கொண்டு, உலகில் தீவினைகளை மேன்மேற் பெருகச்செய்து, அம் மேலோர்க்கு முற்றும்மாறாய் நடக்கும் இக்காலத்தவர் செய்கையினும் வெட்கக்கேடானது வெறொன்று உண்டோ? 'அத்திப் பழத்தைப் பிட்டால் அத்தனையுஞ் சொத்தை' என்னும் பழமொழிக்கு இணங்க வெளிக்கு நெறிதவறாதார்போன்றும் உயர் குலத்தார்போன்றும் ஏமாற்றி நடந்துகொண்டு உள்ளே எல்லாத் தீவினைகளும் நிறைந்து ஊழலாய் இருக்கச்செய்வார் செய்கையினும் மானக்குறைச்சலானது பிறிதொன் றுண்டோ? உடம்பில் ஒருகழலைக்கட்டி கண்டு மிகவுந்துன்புறுவோன் அதனை மூடிவைத்துக்கொண்டு நலம்பாராட்டுவனாயின், அதன்கண் உள்ள நஞ்சு அவனுடம்பின்அகத்தைத் துளைத்து அவனைப் பெரிதும் வருத்தி உயிரிழக்கச்செய்தல் போல இத்தகைய கொடுந்தீவினைகளை நெடுக மூடிவைத்துக்கொண்டு வருபவர் கால்வழியின்றி அற்றுப்போதல் திண்ணம். இனி, அக்கழலையை அறுத்து அதன்கண்உள்ள நச்சுநீரை வெளிப்படுத்தி அதற்கு நல்லமருந்துகள்இட்டு அதனை ஆற்றுவோன் அந்நோய் தீர்ந்து இன்புற்றுவாழ்தல் போலப், பெண்மக்களைச் சீரழிக்கும் இக்கொடுந்தீவினைகளை வேரோடுங்களைந்து அவரை நலம் பெறவைப்பவர்கள், அதனாற்றாமும் நலம்எய்தி இம்மையிலேயே எல்லாஇன்பமும் பெற்று நீடுவாழ்வார்கள். மேல்புலத்தவரான வெள்ளைக்கார நன்மக்கள் ஒருமுறையோ பலமுறையோ மணங்கூடியவர்களுள்ளும் பொருத்தம் இன்மை காணப்படுமாயின் அவர்கள் வேறுவேறு பிரிந்து தத்தமக்கிசைந்தவரோடு பொருந்த இடந்தருதலை நம்மனோர் கருத்திலிருத்தி. அதனாள்விளையும்நலங்களைக் கூர்ந்துபார்த்தல் வேண்டும். நலந்தரும் ஏற்பாடுகளின் சிறப்பை அறியாமல் அவற்றைக் குறை கூறிச் செல்வதால், அங்ஙனஞ் செல்வார்க்கும் அவர்தம் கால்வழியில் வருவார்க்குஞ் சிறுமையுஞ் சீரழிவுமேயன்றி வேறேதும் உண்டாவதில்லை. அதுநிற்க.

மறுமுறை மணத்தால் மற்றொருமேலான நன்மை உண்டாகும். இப்போதுள்ள இரங்கத்தக்கநிலையில், ஆண்டில்முதிர்ந்த ஒருவர் தம்மனையாளை இழந்தால் திரும்ப அவர் மணஞ்செய்து கொள்ளுதற்கு ஆண்டில் மிகஇளைய ஒரு சிறுபெண்ணையே

கைக்கொள்ள வேண்டுவதாகின்றது. பிறகு, முதியோரான அவர்க்கும் அச் சிறுபெண்ணுக்கும் அறிவிலும் அனுபவத்தி லும் முயற்சியிலும் இன்னும் பலவகைகளிலும் ஏற்றத்தாழ்வு கள் மிகுந்திருத்தலால், அவ்விருவர்க்கும் இடையில் ஒற்றுமை யென்பதின்றிப் பல பெருந்தீமைகள் கிளைக்கின்றன. மற்று, மறுமுறை மணம் என்பது வழக்கத்தில் வருமானால், முதிய ராய் மனையாளை இழப்போர் தம் அறிவுக்கும் ஆண்டிற்கும் அனுபவத்திற்கும் ஒத்துக், குடும்பச்சுமையைஏற்று நடத்தத் தக்க மாதரைத் தெரிந்தெடுத்து மறுபடியும் மணந்துகொண்டு இனிது வாழலாம். அங்ஙனமே, கணவனை இழந்தோளும் தனக்கொத்த இயல்புடைய ஒருவரைத்தெரிந்து மணந்து, அவர் தங் குடும்பச்சுமைக்கு உதவியாயிருந்து இனிதுவாழலாம்.

அவ்வாறு, மறுமுறை மணம் வழக்கத்துக்குவரின் மாதர்க் குக் கற்பொழுக்கம் என்பது நிலைபெறுவது யாங்ஙனமெனின்; அதனையும் ஒருசிறிது விளக்குவாம். ஒருபெண்மகள் தன் மனத்திற்கியைந்த காதலனோடு கூடிவாழுங்கால், அவன் சொல் வழிநிற்றலும், அவனையன்றி ஆடவர் பிறரை அவனோடொப் பக் கனவிலும் நினையாமையும், ஈகையறங்களிற் சிறந்து எல் லார்க்கும் இனியளாய் அமைதியோடு ஒழுகுதலுமே கற்பொ ழுக்கமாவதாகும். "கற்பெனப் படுவது சொல் திறம்பாமை" என்னுந்திருமொழியுந் தங்காதலனோடு கூடிவாழும் ஒருமாது அவன்கற்பித்த நற்சொல்வழி நடத்தலே கற்பொழுக்கமாம் என வற்புறுத்துரைத்தல் காண்க. ஒருகாதலனோடுகூடி யிருக் கும் வரையில் அவனுக்குமாறாக நடவாது அவன்மனம் உவப்ப நடத்தலே மாதர்க்குக் கடமையாதல் பெறப்பட்டமையின், அவன் இறந்தபின் வேறொருவனை மணந்து நல்லளாய் ஒழுகு தல் அவளது கற்பொழுக்கத்திற்குச் சிறிதும் பழுதாகாதில்லை. ஒரு காதலனோ டிருக்கையில் அவனுக்குமாறாய்ப் பிழைபட ஒழுகுதலே மாதரின் கற்பொழுக்கத்திற்குக் குற்றமாம் என்க. இனித் தனக்கு எவ்வாற்றானும் ஒவ்வாத ஒருவனோடு பிணைத் துவிடப்பட்ட ஒருநங்கை அவனைவிட்டுநீங்கித் தனக்கொத்த இயல்புடையானைக் கூடிவாழ்தல் அவளது கற்பொழுக்கத்திற் குப் பழுதாகாதில்லையென்பதனை மேலெடுத்துக்காட்டிய மிருதி

நூல்உரைகள் தெளிவுறுத்துதல் காண்க. பண்டைக்காலத்திலும் தாரைஎன்னும் நங்கை முதலில் தனக்கொவ்வாத ஒருவரை மணந்தாளாயினும், பின்னர் அவரைவிட்டுப்பிரிந்து சந்திரனை மணந்தமையும், அதுபற்றி அவளது கற்பொழுக்கம் பழுதுறாமையும் மேலெடுத்துக்காட்டினும். துரோபதை பாண்டவர் ஐவரில் எவ்வெவரை எவ்வெவ்வாண்டிற் கூடியிருந்தனளோ அவ்வவர் சொல்வழிநின்று அவரையன்றிப் பிறரைநினையாது ஒழுகினமையாலன்றோ அவளும் அழியாத கற்புடையாள் என்று சான்றோராற் புகழ்ந்தேத்தப் பட்டாள். இவைகளையெல்லாம் நுண்ணிதாக ஆராய்ந்துணர்வார்க்கு ஒருபெண்மகள் ஒருவனோடு அன்புற்று மருவிவாழுங்கால் அவன்வழி முழுதும்நிற்றலே கற்பொழுக்கமாமென்பதும், அவன் இறந்தபின் அவள் வேறொருவனைமணந்து பின்னர் அவன்வழிநிற்றல் அவள் கற்பொழுக்கத்திற்கு வழுவாகாதென்பதும் இனிதுவிளங்கும்.

இனித், தெய்வத்தன்மைவாய்ந்த காதல்அன்பாற் பிணிக்கப்பட்ட ஒருநங்கை தன்காதலன் இறந்தபின்னும், அவன் உயிரோடு வேற்றுநாட்டில் அகன்றபின்னும், உயிரோடு தன்மருங்கிருப்பினும் ஊழ்வலியால் நோயானுங் கட்குடி சூது முதலான வற்றானும் தனக்கொவ்வாதவன் ஆனபின்னும் வேறொருவனை மணத்தல் அவளது காதல்அன்பிற்கு ஒவ்வாதாலெனின்; நன்று சொன்னாய், தெய்வத்தன்மைவாய்ந்த அத்துணைக் காதலன்புடைய ஒருமாது தன்காதலன் இறந்துபட்டான்என்பது தெரிந்த அளவானே தானும் இறந்துபடுவள்; தீப்பாய்தல், நான்றுகொள்ளுதல், நீரிலமிழ்தல், பட்டினிகிடத்தல் முதலான வழிகளால் தன்னுயிரை மாய்த்தல் காதலன்பாகாது; காதலன் இறந்ததுணையானே கதுமென ஏங்கி உயிர் நீங்குதலே உண்மைக்காதலன்பின் விளைவாமென இறையனாகரப்பொருளுரையும் திருச்சிற்றம்பலக் கோவையாரும் நன்கெடுத்து மொழிதலின் அவ்வியல்புடைய நங்கையரைப்பற்றி ஈண்டு ஏதுமே கூறல்வேண்டா. மற்று, இந்நிலவுலகத்திலுள்ள பெண்பாலார் எல்லாம் அத்துணை விழுமிய காதலன்பு உடையராதல் காணப்படாமையானும், அவரவர் இயல்புக்கு ஏற்ப அவ்வவர் பால் நிகழும் அன்பும் பலபடியான ஏற்றக்குறைச்சல் உடைய

நாடக அரங்கின் ஒருபுறத்தே இன்னிசைக் கருவிகளுடன் இனிய இசைப்பாட்டுகள் சிலர் பாடிக்கொண்டிருத்தல் வேண்டும். மேடைமேல்வந்தோரை யெல்லாம் அரைவட்டமாக இட்ட நாற்காலி வரிசைமேல் அவையிலுள்ளார்க்கு எதிர்முகமாக இருக்கும்படி அமரச்செய்க. இனி, எதிர்முகமாக வன்றி, மேடையின் இருபக்கங்களிலும் இருக்குமாறும் செய்யலாம். அவர்களை அவ்வாறு இருத்தியபின், ஒவ்வொருவரையும் ஆராய்ந்து பார்த்துத், துயிற்றுதற்குத் தகுதியில்லாதவரென்று காணப்படுவோரை யெல்லாம் பணிவோடும் இனிதாகச் சொல்லித் திரும்பவும் கீழே அனுப்பிவிடுக. மேடைமேல் வந்ததும் நாற்காலிகளின்மேல் இருத்தப்பட்டோரில் எவர் தமது ஒருகால்மேல் மற்றொருகாலைத் தூக்கிவைத்துக் கொண்டு நிமிர்ந்தபடியாய்ப் பின்னே சாய்ந்து இருக்கின்றனரோ அவர் இறுமாப்பு உடையவரெனத்தெரிந்து, அவர் அறிதுயிலுக்குத் தகுதியில்லாதவராதலால் அவரை உடனே கீழேபோகச்செய்க. அங்ஙனமே, புகையிலைதின்போரையும், புகைச்சுருட்டுப்பிடிப்போரையும், மூக்குப்பொடி யிடுவோரையும், சாராயநாற்றம் உடையோரையும் இதற்குத் தகுதியில்லாதவரென உணர்ந்து அவரையும்அகற்றிக் கீழே போகச்செய்க. துயிற்றுவோர் இதற்குமுன் அறிதுயிலிற் பலகாறசெல்லும்படி பழக்கப்படுத்திய சிலரையும் தம்மோடு உடன்கொண்டுவந்து முற்கூறிய புதியோர் பக்கத்தில் இருக்கும்படி செய்தலும்நன்று.

அதன் பிறகு, துயிற்றுவோர் தாம் சொல்லுகிறபடி யெல்லாம் அவர்கள் உண்மையுடன் நடந்துகொள்ளும்படி கற்பிக்க. அவர்களை நோக்கிச் சொல்லுவன எல்லாம் இயற்கையான குரலில் தீர்மானத்தோடும் தெளிவாகச் சொல்லப்படுதல் வேண்டும் அதன்பின் ஒவ்வொருவரும் மடிமேல் வைத்ததமது இடது உள்ளங்கையின்மேல் தமது வலதுகையை மேல்நோக்கிவிரித்துவைத்துக்கொள்ளும்படிசெய்க. பின்னர்ச்சிறியவெள்ளிக்காசுகளையேனும், அல்லது அவற்றைப்போற பளிச்சென்றிருக்கும் வேறுசிறு பொருள்களையேனும் வருவித்து அவை ஒவ்வொன்றையும் ஒவ்வொருவர் கையினும் இட்டு, அவரெல்லாரும் தம் கையிலுள்ள அச்சிறுபொருளை இமைகொட்டாமற்

குனிந்தபடியாய் உற்றுநோக்கும்படி சொல்லுக. அவர் எல்லாரும் அங்ஙனம் உற்றுநோக்கிக்கொண் டிருக்கையில், துயிற்றுவோர் முன்னமே இதிற் பழக்கித் தம்முடன் கொண்டு வந்தோரில் ஒருவரையும் அங்ஙனமே உற்றுநோக்கும்படிசெய்து அவரைத் துயிற்றுதற்குப் புகுக. இதில் முன்னரே பழக்கப் படுத்தப்பட்டவர்க்கு இந்தமுறையால் அன்றி, வெறுஞ்சொல்லளவிலே துயிலை எளிதில் வருவிக்கலாமென்றாலும், மற்ற எல்லார்க்குஞ் செய்வதுபோற் செய்தலாற், புதியராய்வந்து அமர்ந்தோர் அதனைக்கண்டு துயிற்றுவோர்வழியில் எளிதில்அடங்கி நின்று துயில்வர். பழையவரை நோக்கித் 'தூங்கும்' என்று சிலமுறை திருப்பித்திருப்பிச் சொன்னவுடன் அவர் நன்றாய்த் தூங்குவர். அவரைத் துயிற்றியபின்பு, மற்றைப்புதியோரிடஞ் சென்று அவருட் கண்இறைப்பைகள் ஆடப்பெற்றாரைப்பார்த்து 'நீர் நும்கண்களை இறுகமூடிக்கொண்டு தூங்கும்' என்று சொல்லிவிட்டு விரைந்து அவர்களின கண்இறைப்பைகளின் மேல் தொட்டேனும் தொடாமலேனும் கீழ்நோக்கித்தடவுக. இதுசெய்தபின் வலதுகைப்பெருவிரலை அவர் ஒவ்வொருவரின்புருவநடுவில்வைத்துச் சிறிதுகீழ்நோக்கி அழுத்திக்கொண்டே அவர்களின் வலதுகையைத் துயிற்றுவோர் இடதுகையால் ஒன்றன்பின்ஒன்றாய் மெல்லெனப்பற்றுக. இங்ஙனஞ் செய்கையிலேயே தீர்மானமானகுரலில் 'இப்போது—உங்கள்—கண்களை—நீங்கள்—திறக்க—முடியாது' என்று அழுத்தமாய்ச் சொல்லுக. இவ்வாறு சொல்லியவுடனே அவர்களிற்பலர் தூக்கத்திலிருந்தாலும் இல்லாவிட்டாலும் தங்கண்களைத் திறக்கமாட்டாமலிருப்பர்; சிலர் அவ்வாறன்றி உடனே கண்களைத் திறந்துவிடுவர்; அத்தகையோர் அறிதுயிலில் எளிதிலே போதறகுத் தகுதியில்லாதவர் ஆகையால், அவர்களையுங் கீழே அனுப்பிவிடுக. பிறகு, உறங்குதற்குத் தக்கவராக மேடைமேல் இருத்திக்கொள்ளப்பட்டவர்கட்கு எதிரிலே சிறிது எட்டநின்றுகொண்டு எல்லாரையும் உச்சந்தலைமுதற்றுவங்கி அடிமுடிய ஒவ்வொருவராய் இடதுகைப்பக்கத் துள்ளவரிலிருந்து தடவிக்கொண்டு செல்க. முன்னமேஇதிற் பழக்கப்படுத்தப்பட்டவர்களும் இடையிடையே இருத்தலால் அவர்கள் எளி

திலே இவ் அறிதுயிலிற்செல்வர். மற்றுப் புதியோர் விரைவில் தூங்காவிட்டால், ஒவ்வொருவரையும் கண்களின்மேலும் கன்னப்பொட்டுகளின்மேலும் விரைந்து கீழ்நோக்கிப்பலகால் தடவுக. இங்ஙனங் கால்மணிநேரம் விடாதுசெய்தால் அவரும் அயர்ந்தஉறக்கத்திற்கு ஏகுவர். தொடக்கத்தில் ஒவ்வொருவர் கையினும்வைத்த வெள்ளிக்காசுகளை எடுத்துக்கொள்க. துவக்கத்தில் வெள்ளிக்காசுமுதலான பளிச்சென்ற பொருள்களைவைத்து அவற்றை உற்றுநோக்கச்செய்தலைவிட, ஒவ்வொருவரும் தமது இடதுகைப்பெருவிரலை வலதுஉள்ளங்கையில் வைத்து இறுகப்பற்றியபடியாய்க் கண்களைநன்றாய்மூடிக்கொள்ளுமாறும் செய்தல்நன்று. இங்ஙனமெல்லாஞ் செய்து சிலரையேனும் பலரையேனும் அன்றி ஒருவரையேனும் துயிற்றுதற்கு முயலுங்கால் துயிற்றுவோர் தமதுநினைவைப் பலமுகமாய்ச் சிதறவிடாது, எல்லார்க்குந் தூக்கத்தை வருவித்தலின்கண்ணும், அதனைவருவித்தபின்னர்ச் செய்யவேண்டுவனவற்றினும்முனைத்து ஒருமுகமாய்க் குவிந்துநிற்குமாறு செய்தல் இன்றியமையாததாகும். ஏனென்றால், எத்தகைய அரியசெயலும் நினைவை ஒருமுகமாய்நிறுத்தி வலிவேற்றுதலினாலேயே முடிக்கப்படுகின்றது. துயிற்றுவோர் இடையிடையே இளைப்படைந்தாற் சிறிது ஒதுங்கிநின்று தூயகாற்றைப் பலமுறை மூக்கால்உள்ளிழுத்தலானும், பாலேனும் பானகமேனும் பருகுதலானும் அவ்விளைப்பைத் தீர்த்துக்கொள்ளலாம். இளைப்புத்தீர்த்துக்கொண்டபின் திரும்பவும் அவர்கள்பாற்சென்று, அவர்களில் உறங்குவோர்க்குப் பின்னும் அவ்வுறக்கத்தை மிகுதிப்படுத்தல்வேண்டி மேற்சொல்லிய முறையாகவே பின்னுஞ் சிறிதுநேரம் முயல்க.

இப்போது அவர்களெல்லாரும் நன்றாய் அயர்ந்துறங்கத் தலைப்படுவர். அவர்கள் உறக்கத்திற்குச் செல்கையிலேயே துயிற்றுவோர் பின்வருவாறு, 'நீங்கள்-என்-சொற்களையல்லாமல்--வேறு-எதனையும்-கேட்க மாட்டீர்கள். நீங்கள்-அயர்ந்த உறக்கத்தில்-இருந்தாலும்-யான்- சொல்லுவனவற்றைக்-கேட்டு அவற்றின்படியெல்லாம்-செய்வீர்கள். யான்-உங்களை-எழுப்புகின்ற வரையில்-நீங்கள்-நன்றாய்-அயர்ந்து-உறங்குவீர்கள்.

யான்-திரும்ப-உங்களை-எழுப்புகின்ற போது-நீங்கள்-நன்றூப் உறக்கம்நீங்கி-எழுந்துவிடுவீர்கள்.' என்று அழுத்தமானகுர லில் மெல்லமெல்லச் சொல்லுக. இவ்வாறுசொல்லித் துயிற்றிய அளவிலே, துயிற்றுவோர் சொல்லுகிறபடியெல்லாம் செய் தற்குஇசைந்த அறிதுயிலில் அவரெல்லாம் செல்லாநிற்பர்.

மூவகைத்துயில்

இனி, ஒருவர்க்கோ அல்லதுபலர்க்கோ இங்ஙனம் வரு விக்கப்படும் அறிதுயிலானது மூவகைப்பட்ட நிலைகளை உடை யதாகின்றது. அவை: **நினைவுத்துயிலும், நினைவற்றதுயி லும், நடைத்துயிலும்** என மூன்றுவகைப்படும். அவற்றுள், நினைவுத்துயிலில் இருப்போர்க்கு நினைவுமாறாது; அத்தூக்கத் தில் நடப்பனவெல்லாம் அதுநீங்கியபின் நினைவுக்குவரும். இந் நிலையில் இருப்போர்க்குக் கண்கள்திறந்தாயினும் மூடியாயி னும் அரைவாசிதிறந்தாயினும் இருக்கும்; இவர்களைத் தாம் ஏவியபடியெல்லாம் நடக்குமாறுசெய்தல் துயிற்றுவோர்க்கு முடியாது; என்றாலும் இவர்களுடைய முகம் கை கால்முத லானஉறுப்புகளைத் தாம் விரும்பியநிலைகளிற் சிறிதுநேரம் நிற் குமாறு துயிற்றுவோர் செய்துவைக்கலாம். இத்துயிலில் இருக் கையில் உடம்பில் நோப்உணர்ச்சிஇராது. ஊசியாற் குத்தினு லும், கத்தியாற் சிறுக அறுத்தாலும் நோய்தோன்றாது. இத னைக்கண்டறிந்த நுண்ணறிவுமிக்க வெள்ளைக்காரமருத்துவர் சிலர் புண்கள் கழலைகளாற் பொறுத்தற்கரிய துன்பத்தைய டையும் நோயாளிகளை அந்நோய்தெரியாமல் அவற்றை அறுத் துத் தீர்க்கும்பொருட்டு இத்துயிலிற் போகச்செய்து, அவற் றை அவர்க்கு நோய்தெரியாமலே அறுத்துத் தீர்க்கின்றனர். முருகக்கடவுளுக்கு நேர்ந்துகொண்டு உடம்பில் அலகேற்றிக் காவடி எடுத்துச்செல்வோர் இத்தகையதொரு நினைவுத்துயி லின்கண்ணேதான் இருக்கின்றனர். இத்துயிலின்பயனை உண் மையாய்உணர்பவர்கள் இதனாற் பலநலங்களை யடையலாம். இரவும் பகலும் உறக்கம்இன்றி நோயால்துன்புறுவார்களை இத்

தூக்கத்திற் போகச்செய்தால் அவர்கள் தமக்குள்ள நோயின் துன்பத்தை அறியாராய் இனிது உறங்குதலோடு, உறக்கம்நீங்கி எழுந்தபின்னும் அந்நோயின் கொடுமை தணியப் பெறுகின்றனர். என்றாலும் இத்துயிலில் நினைவுமாறுபடவிருத்தலால் துயிற்றுவோர் சொல்வனவுஞ் செய்வனவும் எல்லாம் துயில்நீங்கி எழுந்தபின் ஏறக்குறைய நினைவுக்குவரும் என்க.

இனி, மேற்சொல்லிய நினைவுத்துயிலினும் ஆழ்ந்துசெல்லுந்துயிலில் உயிருக்கு நினைவு சிறிதும் நிகழாமையால் அதற்குப்பின் உண்டாம் இது நினைவற்றதுயில்எனப் பெயர்பெற்றது. இத்துயிலின்கண் இருப்போர்க்குச் சுற்றியுள்ள பொருள்களின் உணர்ச்சி சிறிதும் இராது; புறத்தேதோன்றும் ஓசை எவ்வளவு பெரியதாய் எவ்வளவுகொடுமையானதாய் இருப்பினும் அதனை அவர் சிறிதுங்கேளார். துயிற்றுவோருடைய சொற்களையுங் குரலொலியையுந்தவிர வேறொன்றனையும் அவர் உணரார். விழிகள்சுழலாமல் அமைதியுற்றிருக்கும். முன்னேகாட்டிய நினைவுத்துயிலிற்சென்றவரோ திடுக்கிடத்தக்கது எதனையேனுங் கேட்பின் அதனினின்றும் உடனேவிழித்தெழுவர். ஆனால், இந்நினைவற்றதுயிலிற் சென்றவரோ எத்தகையஓசையானும் திடுக்கிட்டு எழார். அவருடைய முகங் கை கால் முதலான உறுப்புகளை எந்தநிலையில் துயிற்றுவோர் வைக்கின்றனரோ அந்தநிலையிலேயே அவைநிற்கும். அவரை நோக்கித் துயிற்றுவோர் ஏதேனும் அடுத்தடுத்துவினவினல்மட்டும் அவர் அதனை அரைவாசியுணர்வோடு கட்டாயத்தினல் விடைகூறுவர்; அங்ஙனம் விடைகூறியபின் மறுபடியும் அவ்வாழ்ந்த தூக்கத்தின் கண்ணேயே அமைதியாய்ச்சென்றிருப்பர். இந்நிலையில் உடம்பினிடத்தே உணர்வு சிறிதும்இல்லாமையால், உடம்பில்ஆழமாக அறுத்துச்செய்யவேண்டியமுறைகளைச் செய்தற்கு இதுவே மிகவும்ஏற்றதொருநிலையாகும். இதற்குமுன்நிகழும் துயிலில் நினைவு பழுதுபடாமலிருத்தலால் அதன்கண் உடம்பின் எவ்விடத்தையேனும் ஆழஅறுத்தால் உடனே ஒருவர் திடுக்கிட்டு எழுந்திருத்தலுங்கூடும். மற்று இதன்கண் எவ்வளவு ஆழமாக உடம்பை அறுத்தாலும், அல்லது கை கால் முதலிய உறுப்புகளை வெட்டியெடுத்தாலும் இத்துயிலின்கட்சென்றோர்

அவற்றைச் சிறிதும் உணரார். இக்கல்விப் பழக்கத்தால் நோயாளிகள் பலர்க்குப் பொறுத்தற்கரிய நோய்கள்பலவற்றை நோயின்றித்தீர்த்த வெள்ளைக்காரமருத்துவர் ஒருவர்* நோயாளி ஒருவனுக்கு மிகவீங்கிப்பெருத்த விதைகள் இரண்டை நோயின்றி அறுத்தெடுத்து நலப்படுத்தினவரலாற்றினை இங்கே மொழிபெயர்த்துக் காட்டுகின்றாம்.

பன்றி விற்பனைசெய்த ஒருவன் மற்றொருவனை அடித்துப் படுகாயப்படுத்தின குற்றத்திற்காக ஏழுஆண்டுகளுக்குக் கடுங்காவலில வைக்கப்பட்டான். அவ்வாறு வைக்கப்பட்டபின் சில காலத்தில் அவனுக்கு இரண்டுவிதைகளும் மிகவீங்கிப்பெருத்து அவன் நடத்தல் இருத்தல் எழுதல்முதலான எவ்வகை நடமாட்டமுஞ்செய்தற்கு இயலாதபடி அவனுக்குப் பெருந்துன்பத்தை விளைவித்தன. அதுகண்டு சிறைக்கோட்டத்தலைவர் அவனை அறமருத்துவக்கழகத்திற்கு அனுப்பினர். அங்கிருந்த வெள்ளைக்காரமருத்துவர் அவனை ஒருநாற்காலியில் இருத்தி, அவனுடைய விதைகளில்ஒன்றைக் குத்தி நீரை வெளியே எடுத்துவிட்டு, அதனுள்ளுக்கு ஏற்றவேண்டியகாரமருந்தை ஏற்றிவிட்டார். அக்காரமருந்து உட்சென்றதும் அதனால் உண்டானஎரிவு பொறுக்கமாட்டாமல் கண்களை இறுகமூடிக்கொண்டு, கறைநரம்பை இரண்டுகைகளாலும் பிடித்து நெருக்கினபடியாய் மிகவுந்துன்புறுவானானன். அதனைக்கண்டு அவன்பால் இரக்கமுற்ற அவ்வெள்ளைக்காரர் தங்கீழ் அலுவல பார்க்கும் வங்காளிமருத்துவரைநோக்கி "யோகநித்திரையில் செலுத்தப்படுவோரைப் பார்த்திருக்கின்றீரா?" என்றுகேட்க, அவர் "மருத்துவக்கல்விக்கழகத்தில் அஃது ஆராயப்பட்டதைப்பார்த்தேன்; என்றாலும், அஃது அப்போது பலிக்கவில்லை." என்றார். அதன்மேல் அவ்வெள்ளைக்காரமருத்துவர் "அக்கலைப்பயிற்சியைப்பற்றி யான் நூல்களிற் கற்றறிந்திருக்கின்றேன்; ஆனால் எவரும் அதைப் பழகப்பார்த்திலேன். இப்போது அதனை இவன்மேற் செய்துபார்க்க மிகவும்விரும்புகின்றேன். இஃது எனக்குப் பலியாமற்போனாலும் போகலாம்." என்று சொல்லிக்கொண்டே அந்நோயாளி நாற்காலியில் இருந்

* Dr. James Esdaile, M. D.

தபடியாகவேயிருக்க, அவனுடைய இரண்டுமுழங்கால்களையும் தம் இரண்டுமுழங்கால்களுக்குஇடையே வைத்துக்கொண்டு, தம் கைகளைக் கீழ்நோக்கியபடியாய் விரித்துநீட்டி அவன்முகத்திலிருந்து வயிற்றின் கொப்பூழ்வரையில் அவனைத்தொடாமலே தடவுவாரானர். இவ்வாறு அரைமணிநேரம்வரையிற் செய்தபின், அவனோடு பேசிப்பார்த்ததில் அவன் எப்போதும்போலவே அறிவோடு பொருத்தமாப்பேசினன். அதன்மேல் அவனைத் திரும்பவும் அமைதியாய் இருக்கக்கற்பித்து, இன்னும் கால்மணிநேரம்வரையில் முன்தடவிய படியாகவே தடவிப்பார்த்தார்; பின்னும் அவன் முன்னிருந்தபடியே இருந்தமையால் அவர் அது பலிக்கவில்லையென்று விட்டுவிட்டுத், தாம் இதில் மிகவுங்களைத்துப்போனமையால் ஓர் இருக்கையில் அமர்ந்து இளைப்பாறுவாரானர். அப்பொழுது அந்நோயாளியோ அசைவற்று அமைதியோடிருந்தான்; துன்பத்தின் அடையாளங்களான முகச்சுளிவுகள் இப்போது அவனிடம் காணப்படவில்லை; கண்ணைத்திறக்கும்படி கற்பிக்கப்பட்டபோது அவன் ‘எங்கும் புகைசூழ்ந்தாற்போல் இருக்கின்றது’ என்றான். அச்சொற்களைக்கேட்டதும், அவ்வெள்ளைக்கார மருத்துவர் பின்னும்அவனை முயன்றுபார்க்குங் கருத்துடையவராய், அவனதுதலைமேல் வாயினுல்ஊதி, அவனதுபின்றலையிலிருந்து முகத்தின்மேலாகக் கையினுல்தடவிக்கொண்டு மேல்வயிறுவரையில் வந்து அதனைஅழுத்தினர். இங்ஙனம் அவர் செய்தவுடனே, அவன் தன்அரையில் அழுத்திக்கொண்டிருந்தகைகளை அப்புறம்எடுத்து, அம்மருத்துவர் கைகளைப் பிடித்துஅழுத்தி ‘நீங்களே என்தாயும் தந்தையும், எனக்கு நீங்கள்திரும்பவும் உயிரைக்கொடுத்தீர்கள்.’ என்றுசொல்லிப் பெருமூச்செறிந்தான். அதனைக்கண்டு அம்மருத்துவர்பின்னும் மனவெழுச்சிஉடையவராய், அறிதுயிலிற்செலுத்தும் முறைகளை மேற்கூறியவாறே பின்னும் விடாமற்செய்வாராயினர். பிறகு ஒருமணிநேரத்திலெல்லாம், தான் தூங்கவேண்டுமென்றும் தன்உணர்வுகள் கலைந்துபோயினவென்றும்சொல்லி வாயைத்திறந்துகொண்டு தூங்கலானன். அவன்தொடர்பாகவிடை சொல்லஇயலவில்லை. கண்களைத்திறக்கும்படி கற்பிக்கப்பட்ட

போது திறந்து, எங்கும்புகையாய் இருக்கிறதென்றும், எவரையும் தெரிந்துகொள்ளக் கூடவில்லையென்றும் கூறினன்; அவன்கண்கள் அப்போது ஒளியின்றி இருந்தன; அவன் கண்ணிறைப்பைகள் மிகவும்வருத்தத்தோடு திறந்தன. துன்பத்தின்அடையாளங்கள் அவனைவிட்டுஇப்போது முழுதும்அகன்றன; அவன்கைகள் அரையைஅழுத்துவதைவிட்டு அவனது மார்பின்மேற் குறுக்கிட்டுக்கிடந்தன. அவன் இப்போது அமைதியான நல்லஉறக்கத்தில் இருக்கின்றானென்பதை அவனது முகம் விளங்கக்காட்டிற்று. அம்மருத்துவர் பலவற்றைப்பற்றி வினவியும், அவன்பெயரைச்சொல்லி ஊக்கக்கூவியும் அவன் ஏதொன்றும் அறியவில்லை.

அதன்மேல் அவ்வெள்ளைக்காரமருத்துவர் அவனைக்கிள்ளிப்பார்த்தும் அவன் அசையவில்லை; அதன்பின் ஒருகுண்டூசியை வருவித்துத், தமக்கு உதவியாய்நிற்கும் வங்காளிமருத்துவரை உற்றுநோக்கும்படி கற்பித்து, அவ்வூசியை அந்நோயாளியின் இடுப்பின்பின்புறத்தே குத்திநுழைத்தார். அப்போதும் அவன் சிறிதும் அசையவில்லை. பின்னர் அவ்வுதவிமருத்துவர் அவ்வூசியைப்பிடுங்கி அவனுடப்பின் பலவிடங்களினுங் குத்திக்குத்திப்பார்த்தார். அப்படிச்செய்தும் அவனுக்குச் சிறிதும் நோய் உண்டானதாகத் தெரியவில்லை. அவன் இவற்றை எள்ளளவும் உணராமல் நாற்காலிமுதுகின் கூரான மேலோரத்தின்மேல் தன்கழுத்தை வைத்துக்கொண்டு நன்றாய் உறங்குவானானன். அதைப்பார்த்ததும், தம்மால் அறிதுயிலிற்செலுத்தப்பட்டு நினைவற்றுத்தூங்கும் அவனது துயிலின் இயல்பைக் கற்றூர்சிலர்க்கு மெய்ப்பித்துக்காட்டும் பொருட்டு அத்துரைமகனர் தமதுதொழிற்சாலைக்குப்போய் அறங்கூறுவோர் இருவரைஅழைத்துவந்தார். அவர்திரும்பி வந்தபோதும், அவனை அவர் முன்விட்டுப்போன நிலைமையிலேயே அவன் இருந்தான். அவன் காதண்டைபோய் எவ்வளவோ உரக்கக் கத்தியும் அவன் விழித்து எழுந்திலன். பின்பு நெருப்பைக் கொண்டுவந்து அவன்முழங்காலின்மேல் வைத்தார்கள், அதனையும் அவன் உணர்ந்திலன். அதன்பின், எடுக்கையிலேயே தங்கள் கண்களில் நீரைவருவித்த நவச்சாரத்தை அவர்கள்

சிறிதுநேரம் அவன் மூக்கிற் பிடித்தார்கள்; அதிலும் அவன்கண்ணிறைப்பைகூட அசையவில்லை. ஆனால் சிறிது நேரத்திற்குப்பின் அவன் சிறிதுஉணர்வுவரப்பெற்றுத் தலை அசைத்ததைக்கண்டவுடன், அம்மருத்துவர் 'உனக்குஏதேனும் பருகுதற்குவேண்டுமா?' எனக்கேட்டனர். அதற்கவன் வாயைத்திறந்ததனால், நவச்சாரத்தை மிகவுங்காரமாகக் கலந்தநொருநீரினை அவனுக்குப் பருகக்கொடுத்தார். அங்கிருந்தமற்றவர்களாற் சிறிது சுவைத்துப்பார்த்தற்கும் ஆகாத காரம்உடைய அந்நீரினை அவன் பால்குடிப்பதுபோற் குடித்துவிட்டு, இன்னும்வேண்டுமென்று வாயைப்பிளந்தான். அதற்குப்பின்னர், மேற்கூரையை நோக்கியபடியாய்இருந்த அவனதுதலையை அவர்நிமிர்த்தி நல்லதொருவிளக்கின் ஒளிக்கு நேரேவைத்து, அவன்றன் கண்களை ஒன்றன்பின்ஒன்றாகத் திறந்துவிட்டார். ஆனால், அங்குள்ள அவ்விளக்கின்ஒளி குருடன்கண்களிற் படுவதுபோலிருந்ததேயல்லாமல், வேறேதுபயனையும் அவன்கண்களுக்குத் தந்திலது. இவ்வாறெல்லாம் அம்மருத்துவரும் அவருடன் இருந்தோரும் ஆராய்ந்துபார்க்கவே, அவனுடையஐம்பொறிகளும் முழுதும்உணர்வற்றநிலையில் இருக்கின்றனவென்பதை அவர்கள் எல்லாரும் நன்குதெளிந்து கொண்டார்கள். அதன்மேல், அவனை ஒருபடுக்கைமேல் நீளப்படுக்கவைத்தார்கள். காலை பதினொருமணிக்குத் துயிற்றப்பட்ட அந்நோயாளி பிற்பகல் மூன்றுமணிக்கு முகத்திலே தண்ணீர் தெளித்தவுடன் அத்துயில் நீங்கி எழுந்தான். அவன் தெளிந்தமுகத்தோடு செம்மையாய் இருந்ததைக்கண்டு அம்மருத்துவர், தம்முடன்இருந்தகற்றோர் முன்னிலையில் அவனைப் பின்வருமாறுவினவி விடைபெற்றார்:

'இப்போது எப்படி இருக்கிறாய்?' 'மிகவுஞ்செம்மையாய் இருக்கின்றேன்.'

'தொண்டையிலாவது வேறெங்காவது நோவிருக்கின்றதா?' 'தொண்டையில்மட்டுஞ் சிறிதுவருத்தம் இருக்கின்றது, மற்றஇடங்களில் நோய்இல்லை.'

'இன்றைக்கு உனக்கு யாது நேர்ந்தது?' 'எனதுவீங்கிய விதையிலுள்ள நீரை வெளிஎடுக்கும்பொருட்டு இப்பெரிய மருத்துவக்கழகத்திற்கு இன்றுகாலையிற் சென்றேன்.'

'அங்ஙனமே நீர் வெளியே எடுக்கப்பட்டதா?' 'ஆம்.'

'விதையை அறுத்தபிறகு நேர்ந்தது நினைவில் இருக்கின்றதா?' 'உடனேயான் நல்லதூக்கத்திற்குப் போனேன், வேறொன்றும் எனக்கு நினைவில் இல்லை.'

'அறுத்தபின்பு ஏதாவது உண்டனையா அல்லதுபருகினையா?' 'நான் விடாய்கொண்டிருந்தேன்; ஆனால், நாட்டுமருத்துவர் என்னை எழுப்புகிறவரையில் நான் பருகுவதற்கு ஏதும் கிடைக்கவில்லை.'

'பாராவது உன்னை ஊசியாற் குத்தினார்களா?' 'அல்லது நெருப்பாற் சுட்டார்களா?' 'இல்லை, இல்லை.'

'உனக்குவெறுப்பானது எதனையேனும் முகர்ந்தனையா?' 'இல்லை.'

'நீ தூங்கும்போது இன்பமாய்த் தூங்கினையா?' 'மிகவும் இன்பமாய்த் தூங்கினேன்.'

'நீ தூங்கியபோது ஏதேனும் ஓசை கேட்டனையா?' 'குரல் ஒலிகள் கேட்டன, ஆனால்; அவைகளை நான் திட்டமாய்த்தெரிந்துகொள்ளக்கூடவில்லை.'

'மருத்துவக்கழகத்தில் என்னைத்தவிர வேறுஎவரையேனும் பார்த்தனையா?' 'இல்லை.'

'நீ தூக்கத்திற்குப்போனபிறகு உன்வீங்கியவிதையில் ஏதேனும் நோவிருந்ததா?' 'நான் எழுந்திருக்கும்வரையில் நோவேயில்லை.'

'அந்தஇடத்தில் இப்போதுஏதேனும் நோவிருக்கிறதா?' 'மிகச்சிறியநோவுதான் இருக்கிறது.'

'இன்றைக்கு உனக்கு எத்தனைமுறை வயிறுபோயிற்று?' மருத்துவக்கழகத்திற்கு வரும்முன் நான்குமுறை போயிற்று, அதன்பிறகு ஒன்றுமில்லை. முன்னே இருந்ததைவிட இப்போது என் வயிறு இலேசாய்இருக்கின்றது.'

இங்ஙனம் அவ்வெள்ளைக்காரமருத்துவர் விதைவீங்கின நோயாளிஒருவனை நினைவற்ற ஆழ்ந்ததுயிலிற் போகச்செய்து அவன்விதைகளை அறுத்துநலப்படுத்தியபின் அவனைத்தக்கோர் பலர்முன்னிலையில்வைத்து மேற்காட்டியவாறு கேட்டுப்பெற்ற விடைகளிலிருந்து, இத்தகைய தூக்கத்திற் சென்றோர்க்கு எவ்

வகையான துன்பமும் தெரிவதில்லையென்றும், அத்தூக்கத்திற் சென்று எழுந்தபின் நோய்நீங்கி நலம்உண்டாமென்றும் அவருடனிருந்தோரெல்லாரும் தம்கண்ணெதிரேகண்டு தெளியப் பெற்றார்கள். இதனைப்போலவேநிகழ்ந்த இன்னும்பல உண்மை நிகழ்ச்சிகளெல்லாம் நினைவற்றஅறிதுயிலிற் சென்றோர்க்கு உண்டாம் அளவிறந்த நலங்களை ஐபந்திரிபுக் கிடனின்றிநன் கெடுத்துக்காட்டுகின்றன.

இனி, மேற்காட்டிய நினைவற்றதுயிலினும் ஆழ்ந்துசெல்லும் மூன்றாவதான நடைத்துயிலினைப்பற்றிச் சிறிது ஆராய்ந்து பார்ப்பாம். நினைவற்றதுயிலினும் ஆழ்ந்துசெல்வதாகிய துயிலில் உயிரின் அறிவைக் கவிந்துநின்ற அறியாமையிருள் விலகிப் போக அவ்வுயிர்க்கு இயற்கை அறிவுவிளக்கம் மிகுந்து தோன்றா நிற்கின்றது. இவ்வாறு தோன்றும் இயற்கைஅறிவுக்குக் கண் காதுமுதலான புறக்கருவிகளின்உதவி சிறிதும் வேண்டப்படுவதில்லை. கண்முதலிய அப்புறக்கருவிகளின்வாயிலாக ஒருவர்க்கு அறிவுநிகழும்போது, அவற்றினெதிரேநிற்குங் கட்டிடங்கள் காடுகள்முதலிய மறைப்புகளால் அவ் அறிவுதடைப்பட்டுநின்று அவற்றிற்கு அப்பால்உள்ளபொருள்களை அறியமாட்டாதாகும். ஆனால், இவ்இயற்கையறிவு விளக்கத்தையோ புறத்தேயுள்ள எவ்வகைப்பொருளும் சிறிதும் மறைக்கவல்லன அல்ல. இஃது ஆயிரங்காதவழிக்கு அப்பால்உள்ள பொருள்களையும் அங்கே நிகழும்நிகழ்ச்சிகளையும் எளிதிலே அறியவல்லதாகும். நினைவோடிருக்கையிற் செய்யமாட்டாமல் முழுதும்விடப்பட்டவைகளையும், அரைகுறையாய் விடப்பட்டவைகளையும் நினைவிழந்த இவ்வறிதுயிலிற் றோன்றிவிளங்கும் அறிவு எளிதிலே திறம்படச்செய்து முடித்திடுக்கின்றது. இத்துயிலில் இருப்பவர்கட்குக் கண்கள்மூடியிருந்தும் கண்ணாற்கண்டு நடப்பவர்களினுந் திறமையாக அவர்கள் நடந்துசெல்கின்றனர், தாண்டஇயலாத பள்ளங்களையெல்லாம் தாண்டிவிடுகின்றனர், ஏறமுடியாதசுவர்கள் கோபுரங்கள் முதலியவற்றிலெல்லாம் உடம்பிற் சிறிதுங் காயம்படாமல் ஏறியிறங்கிவிடுகின்றனர். வியப்பான இந்நடைத் துயிலின் இத்தகைய அருஞ்செயல்களுக்கு உண்மையாக நிகழ்ந்த சிலநிகழ்ச்சிகளை இங்கெடுத்துக்காட்டுவாம்.

இத்தாலியாநாட்டிற் பெயர்பெற்ற இசைப்பாணர்ஒருவர்* தூங்கிக்கொண்டிருக்கையிற் 'பேய்நிலைப்பாட்டு' என்னுஞ்சிறந்ததொருபதிகத்தை இயற்றினர். செல்வவாழ்க்கையிற்சிறந்த ஒருவர்† தமது இளங்தைப்பருவத்திற் கல்லூரியிற் கலைபயின்றுகொண்டிருந்தபோது ஒருநாள் மாலைக்காலத்தில் இலத்தீன் மொழியிற் பதிகம்ஒன்று இயற்றப்புகுந்து அதனைமுடித்தற்கு எவ்வளவோ முயன்றும் முடிக்கமாட்டாமல், அன்றிரவு உறக்கத்திற்குச்சென்றார். உறக்கத்திற்சென்றதும், முடியாதுவிட்ட அப்பதிகத்தைத் திறம்பட முடித்து, விழித்தெழுந்தபின் அதனைநினைவுகூர்ந்தெழுதிவைத்தனர். அப்பதிகத்தைப் பிறகு கண்டஅறிவுடையோரெல்லாம் அதன்சொற்சுவை பொருட்சுவைகளையும் அழகிய அமைப்பையும் மிகவியந்துபாராட்டினர். மேலும், இன்னிசைக் கல்வியில் தேர்ச்சிபெறும்பொருட்டுப் பயின்ற மாணாக்கர்பலரில் ஒருவர் இரவிலே தூங்கிக்கொண்டிருக்கையில் இடையில் அத்தூக்கமயக்கத்துடனே எழுந்து இசைப்பெட்டி‡யண்டை சென்று அதனைச் செவ்வையாய் இயக்கி அதிற் பாடுதற்குக் குறித்துவைக்கப்பட்ட பாட்டைப் பிழைபடாமல் இனிதாய்ப்பாடுவது வழக்கம். தூங்கிக்கொண்டிருக்குநிலையில் அவன்பாற் காணப்பட்ட இந்நுண்ணறிவு விளக்கத்தைப்பார்த்துவியந்த அவன்றன் உடன்மாணாக்கர்சிலர் ஒருநாளிரவு அவ்விசைப்பெட்டிமேற் குறித்துவைக்கப்பட்ட பாட்டைக் கீழதுமேலதாய்ப் புரட்டிவைத்துக்கொண்டு அவன் யாதுசெய்யப்போகின்றான் என்று விழித்துப் பார்த்தபடியாய் இருந்தனர். ஆனால், தூக்கத்தின் இடையே நடக்கும் அம்மாணாக்கனை வழக்கம்போல் இசைப்பெட்டியினிடம் சென்றவுடன், இசைப்பாட்டுக்கடிதம் புரட்டிவைக்கப்பட்டிருத்தலை எப்படியோதெரிந்து, அதனை யெடுத்து, வைக்கவேண்டிய முறைப்படிவைத்துக்கொண்டு பெட்டியை இயக்கிச் செவ்வையாய்ப்பாடினன். இன்னும், ஓர்இளையபெண்பிள்ளை நள்ளிரவில் தூக்கத்தின்நடுவேஎழுந்து, முழுஇருளில் மூடியகண் மூடியபடியாய்இருக்க, அழகாகவும் அறிவாகவுங் கடிதங்கள் எழுதிவைப்பாள். இவ்விடத்தில் வியக்கத்தக்கது மற்றொன்று

* Tartini. † Lord Thurlow. ‡ Piano.

உண்டு. நள்ளிரவின் இருளில் கண்மூடியவாறே அவள் எழுதிக்கொண்டுபோகையில் ஏதேனும் சிறிதுவெளிச்சம் அவளிருக்கும்அறைக்குள் நுழைந்தாலும் அவள் உடனே எழுதமுடியாமல்நின்றுவிடுவள். முழுஇருளில் இருந்தால்மட்டும் அவள் தொடர்ந்து எழுதிக்கொண்டு போவாள். அதுநிற்க.

தமது வீடுநோக்கி வழிச்சென்ற ஒருவர் தாம்செல்லும் வழியின்ஓரமாய் உள்ள வேலிக்குச் சிறிது அப்பால் ஒருகொடிமுந்திரிப்பந்தரின்மேல் உச்சியிற் புதுமையானதொன்று அமர்ந்திருக்கக்கண்டார். அப்போது நள்ளிருட்காலம். உடனே அவர் அங்கேயேநின்றுகொண்டு அதனை உற்றுநோக்கினார். அஃது அப்பந்தரின்மேல் இயங்குவதுபோற் காணப்பட்டது. அவர் அதனோடு பேசிப்பார்த்தார்; ஆனால், அஃது ஏதுமே விடைசொல்லவில்லை. அந்நேரத்தில் ஊர்காவற்சேவகர் ஒருவர் அவ்வழியேவந்தார். உடனே அவர் அச்சேவகரை அருகழைத்து அவ்வுருவத்தைக்காட்டினார். அதனைக்கண்டதும் அச்சேவகர் 'ஓ! அஃதொரு பெண்பிள்ளை' என்றார். அதற்குமற்றவர் 'அப்படியானால் அவள் தூக்கத்தில் இருக்கவேண்டும்?' என்றுசேர்த்துசொன்னார். இங்ஙனம் அவ்வுருவத்தைக்குறித்து ஒருமுடிவுக்குவந்தபின், அவர்கள் அத்தோட்டத்தினது கதவைத்திறந்துகொண்டு உள்நுழைந்து அக்கொடிமுந்திரிப் பந்தரண்டைபோய் அப்பெண்ணைக் கூப்பிட்டுப் பார்த்தார்கள்; ஆனால், விடை கிடைக்கவில்லை. அதன்மேல் அவ்வூர்காவற்சேவகர் அப்பந்தரின்மேல் ஏறினார். அதனால் அப்பெண் அவ்விடத்தைவிட்டு மிகவுங்கிளர்ச்சியோடும் அதன்மேல் நீளஓடி அப்பந்தரின் ஓரத்திற்சென்று, அங்கிருந்து எட்டடி விலகியிருந்த வேறொரு மரப்பந்தரின்மேல் ஒரேகுதியில் தாவி ஏறினாள். இவ் அருஞ்செயல் அவர்களைப் பெரிதும் வியப்புறுத்தினமையால், அவர்கள் அத்தோட்டத்தின்கண்உள்ள வீட்டாரைப்போய் எழுப்பிவிட்டு, அவர்களது மரப்பந்தலின்மேல் தூக்கத்தில் நடப்பவள்ஒருத்தி இருக்கின்றாள் எனத் தெரிவித்தனர். அவர்களெல்லாரும் வீட்டைவிட்டு வெளியேவந்து, எல்லாருமாய் அவளைப் பின்றொடர்ந்து ஓடினார்கள். இவர்கள் இங்ஙனம் பின்றொடர்ந்துவருதலும் அப்பெண் பின்னும் விரைவாய் அம்மரப்

பந்தலின்மேல்ஓடி, அத்தோட்டத்துமாளிகையின் தாழ்வாரத்துஉச்சிமேல் தாவினுள். பிறகு அவள் அங்கிருந்துஓடி அவ்வீட்டின் நடுமேலுச்சியிற்சென்று, அவ்விடத்திருந்த *புகைப்போக்கியின்மேற் சாய்ந்துகொண்டு நின்றுள். கடைசியாக, ஓர்ஏணியைக்கொணர்ந்து சார்த்தி அவ்வீட்டுக்குரியவர்களில் ஓர்இளைஞன் அக்கூரையின் ஒருபக்கமாய்ஏறி அதன்மேற்செல்ல, அங்கெல்லாம் பனிக்கட்டி மிகுதியாய் மூடியிருந்தமையின் அவன் அப்பெண்ணண்டை போகக்கூடாதவனுனன். அதனல் அவன் கீழ்இறங்கி வந்து, ஏணியை அவ்வீட்டின் முகப்பிற்கொண்டுபோய்ச் சார்த்த, இப்போது அச்சேவகர் அதன்மேல் ஏறி அப்பெண்ணண்டையிற் போக, அவர் கிட்டவரும்வரையிற்சும்மாஇருந்தஅப்பெண் அவர்தன்பால் அணுகக்கண்டதும் மறுபடியும் அப்பக்கத்தாழ்வாரத்து உச்சியின்மேலும், அதன்பின் ஒன்றன்பின்ஒன்றுப் அவ்வீட்டுக்கூரையின்மேலும் ஓடி, அங்கிருந்து திரும்பவுங் கொடிமுந்திரிப்பந்தரின்மேல் தாவி ஏறிப், பிறகு அவ்வாண்மக்கள் தன்கிட்டவருதற்குமுன் நிலத்தேகுதித்து அத்தோட்டத்தின் பின்வாயில்வழியே நுழைந்து வெளியேபுறப்பட்டு ஒருபெருந்தெருவின்வழியே ஓடலானுள். உடனே அவர்களெல்லாரும் அவள்பின்னே மிகவிரைந்தோடி ஓரிடத்தே அவளைப்பிடித்தார்கள். பிடித்தபின் அவளை இன்னுளென்று தெரிந்து அவளுறவினரைவருவித்து அவர்களிடம் அவளை ஒப்புவித்தனர். அப்பெண் தூக்கத்தில் இங்ஙனம்வெளிநடந்து திரிந்தது இரண்டாம்முறையாகுமென்று அவளுறவினர்தெரிவித்தனர். இவ்வாறெல்லாம் உயரமானஇடங்களில் ஏறித்திரிந்தும் அவளுடம்பில் ஒருசிறுகாயங்கூட இல்லாமையைக்கண்டு எல்லாரும் நிரம்ப வியப்படைந்தனர்.

இனி, இந்நடைத்துயிலின்கண் ஒருவர்க்குவிளங்கும் அறிவானது நெடுந்தொலைவில்நிகழும் நிகழ்ச்சிகளையும் எதொரு கருவியின்உதவியையும் வேண்டாது எளிதில் அறியவல்லதாயிருக்கின்றதென்பதற்கு உண்மையாநிகழ்ந்த மற்றொருநிகழ்ச்சியினை இங்கெடுத்துக்காட்டுகின்றும். ௧அ௮௫-ஆம்ஆண்டில், **வம்பாய்** நகரத்திற்கு இரண்டுகல்தொலைவில்உள்ள **கொலாபா**

---

* Chimney.

என்னும் இடத்தில் ஓர் ஆங்கிலப்படைத்தலைவரும் அவர்தம் மனைவியாரும் தங்கியிருந்தனர். அம்மம்மையார் யோகநித்திரையைப்பற்றிய பலநூல்களைக் கற்றுவந்தமையிலிருந்து, அம்முறையை ஆராய்ந்துபார்ப்பதில் அளவிறந்த வேட்கையுடையராய், அதற்குத்தக்கதோர் ஆளைத் தேடத், தம்குழந்தைகளுக்குக் கைத்தாயாகவைக்கப்பட்டவள் அறிதுயிலுக்குமிகவும்பொருத்தமுடையவளாகக் கண்டெடுக்கப்பட்டாள். அங்ஙனம் கண்டு எடுக்கப்பட்ட அவளை அவ்வம்மையார் அறிதுயிலிற் போகச்செய்து, தண்ணீர்நிரப்பிய ஒருகண்ணாடிக்குவளையை ஒருமேசைமேல்வைத்து, அதில்உள்ளநீரை உற்றுநோக்கி அங்கே தோன்றுகின்ற தோற்றங்களைத் தெரிவிக்கும்படி செய்வர். இவ்வாறுசெய்து, தொலைவிலுள்ள தம்உற்றார் உறவினர் நண்பர்பால் நிகழ்வனவற்றையெல்லாந் தெளிவாக அறிந்துவந்தார். இதிற் பழக்கப்படுத்திய அப்பெண்பிள்ளை அறிவில்லாதவள் அல்லள்; ஆங்கிலம் நன்றாய்ப்பேசவும் எழுதவும் படிக்கவும் செவ்வையாய்க் கற்பிக்கப்பட்டவள். இவள் இங்ஙனம் பார்த்துச்சொல்லிய தொலைநிகழ்ச்சிகளெல்லாம் நாள்வழியே முற்றும்உண்மைகளாய் முடியக்கண்டு அவ்வாங்கிலமாதரார்க்கு அவளது தெளிவுக்காட்சியில் முழுநம்பிக்கை உண்டாயிருந்தது. இஃதிப்படியிருக்க, ஒருநாட்காலையில் பெரும்படைத்தலைவர் ஒருவரை வரவேற்றற்பொருட்டு அவ்வம்மையாரின் கணவர் நேரத்தோடு உணவெடுக்கையில், தம் ஏவலாளைக் கூப்பிட்டுத் தன்னுடுப்புகளை விரைந்தெடுத்து ஒழுங்குபடுத்திவைக்கச்சொன்னார். அங்ஙனமே செய்யச்சென்ற அவன் சிறிதுநேரங்கழிந்தபின்வந்து திகைப்பும் அச்சமும் உடையவனாய்ப் ‘பெருமானே, பணப்பைஉள்ள அரைப்பட்டிகையைமட்டுங் காணோம்’ என்று வாய்குழறிக்கூறினான். அதற்கவர் ‘படத்தனமாய்ப்பேசாதே, நீ வௌவாலைப்போற் கண்குருடாயிருக்க வேண்டும்!’ என்று கூவிச்சொல்லிக்கொண்டே தம் இருக்கையினின்றும் எழுந்து உடுப்பறைக்குட்சென்றார். அவர் அதனுட்சென்று தேடிப்பார்த்தும் அதனைக்காணமையின் மிகவுஞ் சினங்கொண்டு தம் ஏவலாட்களையெல்லாம் வைய, அவர்கள் தாம் அதனைஎடுக்கவில்லையென்று மிக்கஅச்சத்தோடும் கெஞ்

சிக்கூறினர். அதன்பின் அவர் உணவுகொள்ளும் அறைக்குத் திரும்பிவந்து, தம்மனைவியைப்பார்த்து 'இப்போது உன்தோழிக்குள்ள தெளிவுக்காட்சியின் உண்மையை நான்தெரிந்துகொள்வதற்குத் தக்கஅபயம் கிடைத்திருக்கின்றது. அவளை இங்கேவருவித்துக் காணமற்போன எனது அரைப்பட்டிகையைக்கண்டெடுக்கும்படிசெய்' என்றார். அதன்மேல், அவ்வம்மையார் அத்தோழியை அங்கேவருவிக்க, அவள் எங்கேதன்மேற் குற்றஞ்சாட்டப்போகின்றார்களோவென்று நடுக்கத்தோடும் வந்தாள். ஆனால், அந்தமாதரார், செய்யவேண்டுவது இன்னதென்று தெரிவித்துத், திருடன் இன்னனென்று கண்டபின்னும் அவளை எவர்க்குங்காட்டிக்கொடாமல் தாமே எல்லாவற்றையும் அமைதியுற முடிப்பதாக உறுதிசொன்னார்.

அதன்பின், ஒருகண்ணாடிக்குவளையில் தண்ணீரைநிரப்பி அதனைத்தமது இடதுகைம்மேல் வைத்துக்கொண்டு, வலதுகையால் அதன்மேல் பலமுறைதடவி அதில்உள்ள நீருக்குத் தனதுஉயிர்ப்பினை ஏற்றியபின், அதனை ஒருமேசைமேல்வைத்து அத்தோழி அதனை உற்றுப்பார்த்து அங்கேதோன்றுவது இன்னதென்று சொல்லும்படி கற்பித்தார். அவள் அங்ஙனமே முகத்தைக்குனிந்து அதனை உற்றுநோக்குவாளானாள். சிறிது நேரம் ஆனதும் அம்மாதரார் அவளைநோக்கிப் 'பெண்ணே, ஏதாவது காண்கின்றனையா?' என்றுகேட்க, 'ஒன்றும் இல்லை' என்று விடைகூறினாள். அதன்மேல் அவ்வம்மையார் அவள்தலையின்மேலும் கழுத்தின்பின்புறத்தும் புதிதாகத்தடவி அவளை இன்னும் ஆழ்ந்ததுயிலிற் போகச்செய்துகேட்டும், அவள் 'ஒன்றுமேதோன்றவில்லை' என்றாள். அதனால், அவள் இத்தனைகாலமாகத் தம்மைஏமாற்றித்தான் வந்தனளோஎன்று அவ்வம்மையார் முதலில் ஐயுறவுகொண்டார். திரும்பவும் அம்மாதரார்க்கு மற்றொன்றுமனத்தில் தென்பட்டது. படவே, வேறொருமுறையால் அவளை முயன்றுபார்க்கத்துவங்கினார். 'பெண்ணே, கடைசியாக நம்தலைவர் அரைப்பட்டிகை அணிந்திருந்த நாளைஉற்றுப்பார்' என்றுகற்பித்தார். அவள் சிறிதுநேரம் சும்மாஇருந்து, 'நான் இப்போது நம்தலைவரைக் காண்கின்றேன்' என்று கனவுமயக்கத்தோடு கூறினாள். திரும்பவும் 'அவர்

இப்போது உடை உடுத்துகிறார்; இப்போது படைக்கோலம் பூண்கின்றார்! இப்போது அரைப்பட்டிகை அணிகின்றார். ஆ! இப்போது அவர் அறையைவிட்டுப் போகின்றார்' என்றாள். உடனே அம்மாதரார் 'விடாதே அவரைப் பின்றொடர்ந்து செல்' என்று உறுதியாய்ச் சொன்னார். 'நம்தலைவர் குதிரை மேல் ஏறுகின்றார்; இதோ அதனை ஊர்ந்து செல்கின்றார்!' என்று கூவினாள். பின்னும் அவ்வம்மையார் 'ஓர் இமைப் பொழுதும் அவரைவிடாதே' என்று கூவினார். 'ஐயோ! அவர் மிகவும்விரைவாய்ச்செல்கின்றாரே! எனக்கோ களைப்பாய் இருக்கின்றது!' என்று அப்பெண் பெருமூச்செறிந்தாள். 'விடாதேசெல்' என்று பின்னும் அத்தலைவியார் கட்டளையிட்டார். 'நம்தலைவர் இப்போது இன்னும் மற்றத்தலைவர்களோடு இருக்கிறார். எத்தனையோ படையாட்களும் குடிமக்களும் நிறைந்திருக்கிறார்கள். ஏதோ ஒரு பெரியவேடிக்கை நடக்கின்றது. யாரோ ஒரு பெரிய தலைவர் பயணமாய்ப்போகிறார். அவர்கள் எல்லாரும் தண்ணீருக்கு அருகே நிற்கிறார்கள்.' என்று அப்பெண் கூறினாள். 'அப்படியானால் சிறிதுநேரம் ஓய்வாய் இரு. ஆனால், நின்கண்கள் நம்தலைவரைவிட்டு இப்புறம் திரும்பாதிருக்கட்டும்' என்று அத்தலைவியார் சொல்லினர். அவ்வாறே அவள் சிறிது நேரம் பேசாதிருந்து பின்னர்த் 'தண்ணீர்க்கு அருகிலுள்ள ஒரு பெரிய வீட்டினுள்ளே நம்தலைவர் நுழைகின்றார். அவர் இப்போது ஓர் உடுப்பு அறைக்குட் செல்கின்றார். தம்முடைய உடைகளை மாற்றுகின்றார். அவர் தம் படைக்கோல உடைகளெல்லாம் ஒரு தகரப் பெட்டியினுள்ளே வைக்கப்படுகின்றன; ஆனால், பணப்பையுள்ள அவரது அரைப்பட்டிகைமட்டும் வெளியே விடப்பட்டிருக்கின்றது; கடலுக்கு அணித்தாயுள்ள அவ்வீட்டின் உடுக்கும் அறையின்கண் உள்ள ஒரு மூலையிலே அது தொங்குகின்றது.' என்று மொழிந்தாள்.

அதனைக்கேட்டதும் அவ்வம்மையின் கணவர் 'ஓ! அது தான் யாட் விடுதி' என்றுரைத்துத் தம்ஏவலாளை யழைத்து 'உடனே ஓர் ஆளையனுப்பி, அவ் அரைப்பட்டிகை அங்கே விடப்பட்டிருக்கின்றதா வென்றுபார்த்து வரச்செய்' என்று

கள

கட்டளையிட்டார். அவனும் மற்றுஞ்சிலரோடு அவ்விடத்திற்குப்போயினன்.

அப்படைத்தலைவர் 'உண்மையாகவே யான் அதனை யாட்விடுதியில் விட்டு விட்டேனோ வென்று வியப்புறுகின்றேன். யான் கடைசியாக அதனை அணிந்திருந்தது ரிப்பன்பெருமான் இங்கிலாந்திற்குப் புறப்பட்டுப்போன அன்றைக்கேயாம்.' என்று முனகினர்.

அதற்கந்த அம்மையார் 'நாம் விரைவில் அதன் உண்மையைக்காண்போம். அவ்வரைப்பட்டிகை அங்கே கண்டெடுக்கப்படும் என்பதில் எனக்குச்சிறிதும் ஐயம் இல்லை' என்றார்.

சிறிதுநேரத்திலெல்லாம் போன ஏவலாளும் அவனுடன் சென்றோருந் திரும்பிவரும்அரவம் கேட்டது. அவர்கள் வரும் ஓசையிலிருந்து அப்பொருள் கண்டெடுக்கப்பட்டதென்னும் உண்மை அவ்வம்மையார்க்குத் திண்ணமாயிற்று. அவ்வேவலன் அந்த அரைப்பட்டிகையைத் தலைக்குமேற் பிடித்துக்கொண்டு, அவர்கள் இருந்த மேன்மாளிகைக்கு இரைக்க இரைக்க ஓடிவந்து, அத்தோழிப்பெண் சொன்னவாறே அது கண்டெடுக்கப்பட்டதெனத் தெரிவித்தான்.

இன்னோரன்ன உண்மை நிகழ்ச்சிகளால், நடைத்துயிலின்கண் ஒருவர்க்குள்ள அறிவுவிளக்கமானது வேறொருகருவியினுதவியையும் வேண்டாது தானாகவே எவ்விடத்தினும் எக்காலத்தினும் நிகழும் நிகழ்ச்சிகளையெல்லாம் அறியவல்லதாம் உண்மை நன்குவிளங்காநிற்கும். இனி, இம்மூவகைத் துயிலையும் பயன்படுத்திக்கொள்ளும் முறைகளிற் சிலவற்றை இங்கெடுத்துக்காட்டுவாம்.

பயன்படுத்தும் முறைகள்

நினைவுத்துயிலின்கண் நினைவுமாறாமல் இருத்தலால் இதனாற்சில எளியபயன்களைத்தாம் பெறுதல்கூடும். இத்துயிலில் இருப்போர் துயிற்றுவோர்பால் நினைவு ஒன்றுபொருந்தி நிற்பர்; அவர் சொல்லுகிறபடியே செய்வாரல்லாமல் அவர்க்கு

எதிரிடையானது ஒன்றுஞ்செய்யார். துயிற்றுவோர் அவர் கண்களைமூடி 'இவைகளை நும்மால் திறக்கமுடியாது' என்று சொன்னால் அவர் அங்ஙனமே அவற்றைத் திறக்கமாட்டாமல் இருப்பார். அவரதுவாயைமூடி 'நமது பெயரைக்கேட்டால், அதனைச்சொல்லமாட்டாமல் வறிதேஇருப்பீர்' என்று சொன்னால் அவர் அப்படியே இருப்பர். வெங்காயத்தைக்கையிற் கொடுத்து 'இது நல்லமணம் உள்ளதொரு முல்லைப்பூ, இதனை முகந்துபாரும்' என்றால் அவ்வாறே அதனை முகந்து மகிழ்வர். இனிய மணங்கமழுஞ் செங்கழுநீர்ப்பூ வொன்றைக் கையிற்றந்து, இது மணம் இல்லாத எருக்கம்பூ' என்று மொழிந்தால், உடனே அவர் அதனை முகந்துபார்த்து அது மணமில்லாததென்று அருவருப்புறுவர். அவரது கையைப்பிடித்து அதில் ஓரிடத்தைக்குறித்துக்காட்டி 'இவ்விடத்தில் இரத்தஓட்டம் இராது, இங்கே உணர்ச்சிஇராது, நோவுஇராது' என்று உறுத்திச்சொல்லியபின் ஒரு குண்டூசியை எடுத்து அவ்விடத்தே மேற்சதையிற் செருகினால் அவர் அதனைச் சிறிதும் உணரார்; பிறகு அதனைப்பிடுங்கிவிட்டு அவ்விடத்தைவிரலால் தேய்த்து விட்டால் அங்கே ஓர் அடையாளமுங் காணப்படாது. இங்ஙனமே, இத்துயிலில் இன்னும் பலவேடிக்கைகளை யெல்லாம் செய்துகாட்டலாம். இத்துயிலில் இருப்போர்க்குக் கண்கள் மூடியும் இருக்கலாம். திறந்தும் இருக்கலாம். திறந்திருக்குமாயின் துயிற்றுவோர் கட்பார்வையும் இவரது கட்பார்வையும் ஒன்றையொன்று உற்றுநோக்கியபடியாய் இருத்தல்வேண்டும். மூடியிருக்குமாயின் துயிற்றுவோர் தம்முடைய சொற்களைக் கொண்டு அவரது நினைவைத் தம்வழிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

இனி, இத்துயில் சிறுநோய்களைத்தீர்த்தற்கு ஏற்றதொன்றாய் இருத்தலால் தலைவலி செவிக்குத்தல் கண்ணோப் பல்வலி உடம்புநோய் காய்ச்சல் தேள்கொட்டினவலி முதலியற்றை இதனுதவியாற் போக்கலாம். ஆனால், இதனுதவியால் நோய்களை நீக்கவிரும்புகிறவர் உண்மையாகவே அன்பும் அருளும் நல்லெண்ணமுஞ் செவ்வையான உடம்பும் உடையவராக இருத்தல்வேண்டும். இவ்வினிய இயல்புகள் உடையவர் ஒரு

வரை அறிதுயிலிற் போகச்செய்து அவரைத்தொட்டு 'இந் நோய் நீங்குக' என்றுசொன்ன அளவிலே, அஃது அவரை விட்டு நீங்குதல் திண்ணம். இதற்குத் தாயானவள் குழந்தையைப்போற்றும் முறையே தக்கசான்றாம். கீழேதவறிவிழுந்து காயம்பட்ட சிறுமகவைத் தாய் பதறிஎடுத்து, அக்காயத்தைத் துடைத்துக் கைபால் மெல்லத்தடவி ஆறுதல்மொழிகளால் அதற்கு அத்துன்பத்தைப்போக்கித் தன்மடிமேல் அதனைத் தூங்கவைத்தலே நாம் உற்றுநோக்கும்போது, அவள் இவ்வறிதுயிலுக்குரிய முறைகளைத் தன்னையறியாமலே இனிது செய்கின்றாள்என உணரப்பெறுகின்றோம் அல்லமே? அன்பு மிகுதியும் உடையார்க்கு இனிய சொல்லும் மெல்லென்ற செயலுந் தாமாகவேவருதல் இயற்கை. ஆதலாற், பிறர்க்குள்ள நோய்தீர்த்தற் பொருட்டு அவர்பால் அறிதுயிலினைவருவித்தற்குப்பழகுவோர் மலர்ந்தமுகமும் இனியசொல்லும் இனிய செயலும் நோயற்றஉடம்பும் உடையவராயிருக்க முதலிற் பழகிக்கொள்ளல்வேண்டும். அதனோடு, நோய்கொண்டவர்க்கு அவ்வந்நோய் நீங்குதற்குஏற்ற தூய உணவுகளை மாற்றிமாற்றிக்கொடுக்கும் வகைகளையும், அவர் அழுக்கான ஆடைகளை அணியாமலும் நல்லகாற்றும் வெளிச்சமும் இல்லாமற் குப்பைகூளங்கள்மலிந்த அழுக்கான இடங்களில் இராமலும் தம்மைத் துப்புரவாய் வைத்துக்கொள்ளும் முறைகளையும் எடுத்துச் சொல்லுதல் வேண்டும். இக்காலத்துமருத்துவர்கள் காப்பி தேயிலை கோக்கோ இறைச்சி முதலிய நஞ்சான பண்டங்களை அவித்து இறுத்த சாற்றையும், முட்டை உவைன் முதலான பொருள்களையும், நச்சுக்காற்று அடங்கிய சோடாத்தண்ணீரையும நோயாளிகளுக்கு ஏராளமாப்க் கொடுத்து வருகிறார்கள். இவை அத்தனையும் நோயை மிகுதிப்படுத்துவனவேயல்லாமல் அதனைத்தணிப்பன அல்ல என்று இப்பண்டங்களிற்கலந்துள்ள நஞ்சை நன்கு ஆராய்ந்தறிந்த புகழ்பெற்ற ஆங்கில மருத்துவர்களே* கூறிவருதலால், இவ்வுண்மையை அறியாமல் இவற்றை நோயாளிகட்குக் கொடுத்தல் பெருந்தீமைக்கேவழியாம். ஆகையால், அறிதுயில் முறையால் நோய்

* See for instance Dr. A. Haig's Uric Acid.

நீக்கப்புகுவோர் அந்நோயை நீக்குகையில். அந்நோய்க்குமே லுமேலும் இடஞ்செய்யும் இத்தகையபொருள்களை உணவாகக்கொடாமல் தடைசெய்தல் வேண்டும். அதுநிற்க.

இனி, நோயாளியை இங்ஙனவுறக்கத்துயிலிற் போகச்செய்தவுடன், நோயுள்ள இடங்களைக் கையால் தொட்டேனும் தொடாமலேனும் கீழ்நோக்கிப் பலகால் தடவுதல்வேண்டும். இங்ஙனந் தடவுங்கால் ஐந்தாவதான கடைச்சிறுவிரலைச்சிறிது அகற்றி, மற்றை நான்குவிரல்களையும் ஒருங்குசேர்த்து இரண்டுகைகளாலுங் கீழ்நோக்கித்தடவுக. மேலிருந்துதடவிக் கீழ் இறக்கின கைவிரல்களை உதறிவிட்டுத், திரும்பவும் பக்கச்சாய்வாய்க் கைவிரல்களை மேல்உயர்த்தி முன்போலவே கீழ்நோக்கித் தடவி விரல்களைஉதறுக. விரல்களை இங்ஙனம் உதறுதல் என் என்றால், நோயாளியின் நோயைக் கீழ்இறக்கியவுடன் அந்நோய் இதனைநீக்குவோர் கைவிரல்நுனிகளின்வழியே பற்றிக்கொண்டுஅவரது உடம்பில் ஏறுதிருத்தற் பொருட்டேயாம். இங்ஙனம் பலகாற் றடவியபின் நோயுள்ள இடங்களின்மேல் வாயினாற் கீழ்நோக்கி மெல்லஊதி மெல்லிய வாய்க்காற்று அவற்றிற் படும்படிசெய்க. வாயினால் இவ்வாறு நேரேஊதுவதோடு, மெல்லிய தூயதுணியைஎட்டுமடிப்புகளாகமடித்து நோயுற்ற இடத்தின்மேல் வைத்துப், பிறகு இத்துணியின்மேல் வாயை வைத்துக்கதகதப்பு உண்டாகுமாறும் ஊதுதல் சிலநோய்களுக்குக் கட்டாயம் செய்யப்படுதல் வேண்டும். கழலைகள், கட்டிகள், வீக்கங்கள், நரம்புச்சுளுக்குகள், எரிவுகள் உள்ள இடங்களில்இப்படிச்செய்தல் இன்றியமையாததாகும். ஒருகால் வாயை வைத்து ஊதியபின், மறுபடியுங் காற்றை உள்ளிழுத்தே ஊதவேண்டுமாதலால், வாயை அந்நோயுள்ள இடங்களில் வைத்தபடியாகவே மூச்சை உள்ளிழுத்தல் சிறிதும் ஆகாது. முகத்தைத் தூயகாற்றுவரும் அப்பக்கமாய்த்திருப்பி மூச்சை உள்ளிழுத்துக் கொண்டு மறுபடியும் ஊதுக. 'இந்நோய் தீர்தல் வேண்டும்' என்னும் எண்ணம் முனைத்து நிற்க இங்ஙனம் ஊதுவதால் நோய்தீர்ப்போரது எண்ணத்தால் உந்தப்படும் மின்ஆற்றல் அவரது மூச்சின் வழியோடி நோயாளிக்குள்ள அந்நோய்களை விலகச் செய்யும். இவற்றோடு

'இந்நோய் உம்மைவிட்டு-அகன்றது. உமது உடம்பினுள்ளே-தூயஇரத்தம்-பரவுகின்றது. உம்முடையநரம்புகள்-வலிவடைகின்றன. நீர்-உள்ளக் கிளர்ச்சி-உடையவராகின்றீர். நீர்-இத்துயிலில்-நன்றாய்த்-தூங்கி-எழுந்ததும்-உமதுஉடம்பு-செவ்வையாகவும்-உமதுஉள்ளம்-கிளர்ச்சி யாகவும்-இருக்கக்காண்பீர்.' என்று பலகால் ஆழ்ந்த மெல்லிய குரலில் திருப்பித் திருப்பிச்சொல்லுக. இவ்வாறெல்லாம் செய்து, அவனர நன்றாய்த்தூங்கி எழும்படி கற்பித்துவிட்டுப் போனால், அவர் அவ்வாறே அயர்ந்துறங்கி எழுந்து, தமக்கிருந்தநோய் நீங்கிப் போகக் கண்டு வியந்து மகிழ்வர். மேலெடுத்துக் காட்டிய சிறுநோய்களெல்லாம்,மேற்கூறிய முறைப்படி ஒருபொழுது அல்லது இரண்டு மூன்று பொழுதுசெய்த அளவானே நீங்கும். நாட்பட்ட குளிர் காய்ச்சல், நச்சுக்காய்ச்சல், சளிக்காய்ச்சல், வயிற்றுவலி, குண்டிக்காய்வலி, ஈரல்வலி, நெஞ்சடைப்பு, படை, புண்,தொழுநோய், பொருத்துப்பிடிப்பு, என்புருக்கி, டண்டைக்குடைச்சல், பிளவை, இருமல் முதலான கடுநோய்களுக்கோ சிலகால் மேற்கூறிய முறைகளைச்செய்தல் போதாது. பலநாளும் பலகாலும்மேற்கூறிய முறைகளைத்தொடர்பாகச்செய்து வரல்வேண்டும். நோய்நீக்குவோர்க்கு அந்நோய்கள் தொற்றிக்கொள்ளாதபடி அவர் தம்மைத் தூய்மைசெய்துகொண்டு பிராணயாமஞ் செய்துவரல்வேண்டும். இக்கடுநோய்கொண்ட நோயாளிகட்குத் தீவிக்குடல், மலக்குடல், வியர்வைத்துளைகள் முதலியவற்றை அடிக்கடிகழுவித் துப்புரவுசெய்தலோடு, தூயவுணவும் தூய நீருங்காற்றும் உட்கொள்ளும்படியும் செய்தல்வேண்டும். இன்னும் நல்லமருந்துகள் உட்கொடுத்தற்கும் பின்வாங்கலாகாது. அதுநிற்க.

இனி, நினைவற்ற ஆழ்ந்ததுயிலில் இருப்போர்க்குப் புறத்தே சுற்றிலும் நடப்பது ஒன்றுந் தெரியாதென்பதை முன்னரே காட்டினும். இத்தூக்கத்திலிருப்போர்க்குஇது கலையாமலே, இவர்களைவிழித்து உணர்வுபெறுமாறு செய்து பல புதுமைகளை விளைவித்துக்காட்டுவதுடன், தீர்த்தற்கரிய கொடுநோய்களையும் தீர்த்துவிடலாம். இயற்கையான விழிப்புக்கு வாராமலே கண்களைத் திறந்து, துயிற்றுவோர் சொல்வனவற்றை

உணர்ந்து செப்பும்படி இத்தூக்கத்தில் ஒருவரைச்செலுத்து கையிலேயே கற்பித்து ஒழுங்குசெய்துகொள்ளல் வேண்டும். மேற்கூறிய நினைவுத்துயிலில் இருப்போரைப் பின்வருமாறு செய்து இந்நினைவற்றதுயிலிற் செலுத்துக. கடைச்சிறுவிரல் தவிர ஏனைவிரல்களைச் சேர்த்தபடியாய் இரண்டுகைகளையும் நீட்டி அவரது உச்சந்தலைக்குமேற் கீழ்நோக்கிப்பிடிக்க. அங்ஙனம் பிடித்திருக்கையில் அவ்விரல்களின் நுனிவழியே தமது மின்னாற்றல் அவரது உச்சந்தலையினுள் இறங்கி அவரை நினைவற்ற ஆழ்ந்ததுயிலின்கட் கொண்டுசெல்வதாகத் துயிற்றுவோர் நன்றாய் உறுத்து நினைத்தல்வேண்டும். இப்படிச்சிறிது நேரம் நினைத்தபின், பிடித்த அவ்விரல்களால் அவ்வுச்சந்தலையிலிருந்து அவரது முழங்கால் வரையில் தடவிப், பிறகுபக்கச்சாய்வாய் அக்கைகளைப்புரட்டி அவர்தம் விலாப்பக்கமாக மேலுயர்த்தி மறுபடியும் தடவுக. இங்ஙனம் பலகாற் செய்தபின் 'இப்போது-நீர்-ஆழ்ந்த-தூக்கத்திற்-செல்லுகிறீர். உம்மைச் சுற்றிலும்நடப்பது-இன்னதென்று-உமக்குத்தெரியாது. யான்-சொல்வனவற்றைத் தவிர-வேறொன்றும்-உமக்குத்-தெரியாது. என்சொற்களைத்தவிர-வேறொன்றும்-உமக்குக்கேளாது. நீர்-ஆழ்ந்த-தூக்கத்தில்-இருக்கும்-போது, யான்-சொல்லுகிறபடியே-செய்வீர்-இப் போது-நல்ல-ஆழ்ந்த-தூக்கத் தில்-இருக்கின்றீர்-தூக்கம்-அயர்ந்ததூக்கம்-ஆழ்ந்ததூக்கம்-ஆழ்ந்ததூக்கம்.' என்று திருப்பித்திருப்பி ஆழ்ந்ததீர்மானமானகுரலிற் பலகாற் சொல்லி, இடையிடையே மேற்சொல்லியபடி உச்சந்தலையிலிருந்து தடவுதலுஞ் செய்க. இவ்வாறு கால்மணிநேரம் வரையிற்செய்தவுடனே அவர் ஆழ்ந்த துயிலிற்சென்று தூங்குவர். இத்துக்கத்திற்கு அறிகுறியாக ஒரே அளவாக நெட்டுயிர்ப்பெறிவர்; காதண்டை எவ்வளவு பெரியஓசையை எழுப்பினும் அவர் அதனை உணரார்; துயிற்றுவோர் குரலொலியைத் தவிரப் பிறிதொன்றும் அவருக்குக் கேளாது. இவ்வடையாளங்களைக்கண்டவுடன், துயிற்றுவோர் பின்வருமாறு அவருக்குச்சொல்லுக: 'இப்போது-நீர்-நிரப்ப-ஆழ்ந்ததுயிலில்-இருப்பினும்-யான் சொல்வனவற்றை மட்டும்-என்கட்டளைப்படி-கேட்கின்றீர்' என்றபின் 'என்சொற்களைக் கேட்கின்றீரா?' என்று

வினவுக. முதலிற் சிறிது சும்மா இருப்பார்; பின்னும் பின்னும் விடாமற் கேட்டால் அவர் ‘ஆம், இப்போது கேட்கின்றேன்’ என்று தூக்கமயக்கத்தால் மெல்ல மெல்லச் சொல்வர். பிறகு ‘உமது ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தபடியே கண்களைத் திறந்து பாரும்’ என்று இரண்டு மூன்றுமுறை சொல்லுக. அங்ஙனமே அவர் கண்களைச் சிறிது உழைப்போடு அரைவாசி திறந்துபார்ப்பர். அப்போது அவர் தம் கண்கள் சிவந்திருக்கும். இதனால், அவர் ஆழ்ந்த துயிலிலேதான் இருக்கின்றார் என்பதனைத் திண்ணமாகத் தெரிந்து கொள்ளலாம்.

நினைவற்ற இத்துயிலில் இருப்போர்க்கு ஐம்பொறியுணர்வுகளும் தம் இயற்கைக்கு மாறுபட்டு நடக்குமாறும் செய்யலாம். யாங்ஙனமெனின், ஒரு தாம்புக்கயிற்றைக் கையிற்கொடுத்து ‘இது மெல்லிய ஒரு பூமாலை, இதனை நீர் கழுத்தில் அணிந்து கொள்ளலாம்’ என்று சொன்னால், அவர் அதனைத் தடவிப் பார்த்துப் புன்சிரிப்போடு அதனைக் கழுத்தில் அணிந்துகொண்டு இருப்பர். பிறகு ‘நீர் இப்போது கழுத்தில் அணிந்திருக்கும் இந்த மாலையில் தொடுக்கப்பட்டுள்ள முல்லைமலர்கள் எவ்வளவு நறுமணம் உள்ளனவாயிருக்கின்றன! நீர் இந்த மாலையை முகந்துபாரும். அதன் மணம் உமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தரும்.’ என்று சொன்னவுடன், அவர் தமது கழுத்திற் பூண்டிருக்கும் அந்தத் தாம்புக்கயிற்றைப் பிடித்துத் தூக்கி முகந்து பார்த்துப் புன்சிரிப்புக்கொண்டு மகிழ்வர். ‘அதன் மணம் எப்படியிருக்கிறது?’ என்று வினவினால் ‘மிகவும் நன்றாயிருக்கிறது!’ என்று சொல்லிச் சொல்லி அதனை முகந்து முகந்து பார்ப்பர். அதன்பிற் சிறிது கற்கண்டை அவர் கையிற்கொடுத்து ‘இவை கசப்பான பாகற்காய்விதை, இவற்றை நாவில் இட்டுச் சுவைத்துப்பாரும்.’ என்று சொன்னால், அவர் அவற்றை வாயினுட்பெய்து சுவைத்து இவை கசக்கின்றன’ என்று முகஞ்சுளித்துச் சொல்லி அவற்றைக் கீழே உமிழ்வர். பின்பு, சில கொம்புப்பாகற்காயை அவரிடந் தந்து ‘இவைகள் குளிர்ந்த நல்லசுவையுள்ள வெள்ளரிக்காய், இவைகளைத் தின்றுபாரும்’ என்று கூறினால், அவர் அவற்றை வாயிலிட்டு மென்று நன்றாய்ச் சுவைத்து மகிழ்ச்சியோடு உண்பர். இந்த வெள்ளரிக்

199013

லுஞ் சட்ட நூல்வல்ல திருவாளர் தம்பையாபிள்ளை யவர்கள் சுவாமிகளிடம் வந்து உசாவிய சைவசித்தாந்த நுண்ணிய உயர்பொருட் கேள்விகட்கெல்லாம் இயைந்த விடைகள் அளித்து அவர்களையும் மகிழ்வித்தார்கள்.

இனி, நீர்வேலிச் சங்கரபண்டிதர் பேரனார் வேண்டிக்கொண்டதற்கு இணங்கி ஜனவரி 8-ஆம்நாள் நீர்வேலியிற், சங்கரபண்டிதர் கல்விச்சாலையில் மாலை 7 மணிதுவங்கிக் 'கடவுள் இருதிறமாய் நிற்கும்நிலை' என்னும் அரிய நுண்பொருளைப்பற்றி 2 மணிநேரம்வரையிற் சுவாமிகள் இனியதொரு விரிவுரை நிகழ்த்தினார்கள். பெருந்திரளான அன்பர்கள் நாற்புறமும் நெருங்கியிருந்தமையாற், காற்றோட்டமின்றிச் சுவாமிகளுக்கு இடையிற் சிறிது அயர்வு தோன்றினும், அருகிருந்த அன்பர்கள்செய்த உபசாரத்தால் விரிவுரை பின்னர் இனிது நடைபெற்று எல்லார் உள்ளத்தையும் மிக உருகச்செய்தது. விரிவுரை முடிவில் தமிழ்ப்புலவர் ஒருவர் சுவாமிகள் விரிவுரையைவியந்து செய்யுள் எழுதிப்படித்தனர்.

இனிக், கந்தரோடையிலுள்ள அன்பர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்கி ஜனவரி 11-ஆம்நாள் மாலையிற், கந்தரோடைக் கல்விச்சாலை மாமண்டபத்திற் 'கடவுளின் ஆண் பெண் உருவநிலை' என்னும் அரும்பொருளைப்பற்றிப் பேசச் சுவாமிகள் இசைந்தனர். சுவாமிகள் மண்டபத்தில் அமைந்திருந்த உயர்ந்தமேடைமேல்வந்து இருக்கையில் அமர்ந்ததும், திருத்தம்பையாபிள்ளையவர்கள் எழுந்து, சுவாமிகள் சைவசித்தாந்த விளக்கத்திற்கும் செந்தமிழ் ஆக்கத்திற்கும் பன்னெடுங்காலமாகச் செய்துவரும் ஞானத் திருத்தொண்டின் மாட்சிகளைத் தேன்பெருக்கெடுத்தால் அனைய இனியசெந்தமிழில் விரித்துச் சொல்லி, அதன்பின் சுவாமிகள் மேற்குறித்த பொருளைப்பற்றிப்பேசக் கேட்டுக்கொண்டார்கள். உடனே சுவாமிகள் எழுந்து சத்தி சிவத்தின் இயல்புகளை எடுத்துவிரித்து, அவற்றை இஞ்ஞான்றை இயற்கைப்பொருணூற் பொருள்களோடு பொருந்தக்காட்டி நிரீசுரவாதிகளும் அவற்றை ஏற்றுமகிழும்படி 2 மணிநேரம் மிகவுந் திறமாகப்பேசினார்கள். முடிவில் திரு அருளம்பலம் அவர்கள் எழுந்து சுவாமிகளின் இவ்விரிவுரையில் அமைந்த நுட்பங்களையும் அரும்பொருள்களையும் பாராட்டிப்பேசினார்கள். அதன்பின், திரு, இராமநாதன்றுரையவர்களால் அமைக்கப்பட்டுள்ள பரமேசுவர கல்லூரியின் தமிழ் ஆசிரியரான திரு இராசையனார் சுவாமிகள்மேல் வாழ்த்துப்பா எழுதிப் படித்தனர்.

ஜனவரி 12-ஆம்நாள் மாலையிற் சைவசித்தாந்த உணர்ச்சிவாய்ந்த திருச் சபாபதி என்னும் அன்பர் சுவாமிகளை இருப்பிடத்தில்வந்துகண்டு, சைவசித்தாந்த நுண்பொருள்கள் பலவற்றைப்பற்றி உசாவ, அவற்றிற்கெல்லாம் சுவாமிகள் தக்க விடைகள் அளித்து அவரை மகிழ்வித்தனர்.,

கடைசியாக ஜனவரி, 14-ஆம்நாள் மாலை திரு அருளம்பலம் அவர்களால் யாழ்ப்பாணத்து ரிட்ஜ்வேஹாலில் ஒரு பேரவை கூட்டப்பட்டது. நைட்பட்டஞ் சூட்டப்பெற்றவரும், இலங்கைச் சட்டசபை உறுப்பினருமான மாட்சிமை தங்கிய திருக் கனகசபை அவர்கள் அவ் அவைக்குத் தலைவராக அமர்த்தப்பட்டமையால், அவர்களும் மற்றவர்களும் சுவாமிகளை எதிர்கொண்டழைத்துச் சென்று, கனகசபை அவர்கள் சுவாமிகளின் அருமை பெருமைகளை முதலில் எடுத்துச்சொல்லி, அதன்பிற் 'பண்டைத்தமிழர் நாகரிகம்' என்னும் அரிய பொருளைப்பற்றி ஒருவிரிவுரை நிகழ்த்தும்படி சுவாமிகளை வேண்டிக்கொண்டனர். சுவாமிகள் உடனேஎழுந்து கடல்மடை திறந்தால் எனவும் மாரிகாலத்துத் தலைப்பெயல் எனவும் மூன்றுமணிநேரம்வரையில் அப்பொருளை விரித்துத் தூய இனிய செந்தமிழிற் பேசினார்கள். இக்கூட்டத்திற்கு யாழ்ப்பாண வட்டத்தில் உள்ள தமிழ் ஆங்கிலம் உணர்ந்தாரெல்லாரும் வந்து நிறைந்திருந்தமையால், அவர்கள் எல்லாரும் 'இஃதொப்பதொரு சிறந்தவிரிவுரை இதுவரையில் எங்குங் கேட்டிலேம். சுவாமிகளை இன்னுஞ் சிலகாலம் இங்கிருக்கச் செய்து இன்னுஞ் சிலவிரிவுரைகள் நிகழ்வித்தாலன்றி எம் அவா அடங்காது'

எனக் கேட்டனரேனும், தமிழ்நாட்டிலிருந்து நூல்வழியாகச் செய்யும் தொண்டுகள் முட்டுப்படுமாதலால், திருவருளை முன்னிட்டு மற்றொருமுறை வருவதாகச்சொல்லிச் சுவாமிகள் எல்லாரிடத்தும் விடைபெற்றுக்கொண்டனர்.

ஜனவரி, 16-ஆம்நாள் மாலையில் சுவாமிகள் யாழ்ப்பாணத்திருந்தும் புறப்பட்டு இந்தியாவுக்குத் திரும்பக் குறிக்கப்பட்டமையால், 15, 16-ஆம்நாட்களில் அன்பர்கள் பலர் சுவாமிகளை இருப்பிடத்தில்வந்து கண்டு, தாம் அறிய விழைந்த பலதிறப் பொருள்களையும் வினவி உண்மைதெளிந்து மகிழ்ந்தார்கள். மணியகாரர் திரு முத்துக்குமாரு அவர்கள் தமது ஊர்திவண்டியிற் சுவாமிகளை அழைத்துச்சென்று திரு இராமநாதர் நிலைபெறுவித்த பெண்மக்கள் கல்லூரி, ஆண்மக்கள் கல்லூரி, உலாந்தாக்கோட்டை, நல்லூர்ச் சிவசுப்பிரமணியர் திருக்கோயில் முதலியவைகளைக் காட்டுவித்தார்கள். விரிவுரைகள் நடந்த ஒவ்வோர் இடங்கட்குஞ் சுவாமிகள் செல்லுமுன் ஆங்காங்குள்ள அன்பர்கள் மேளவாத்தியம், விளக்கம் முதலியவற்றோடு எதிர்வந்து அழைத்துப் போய்ப் பூமாலைகள் அணிந்து உபசரித்தார்கள். (தொடரும்) திருநாவுக்கரசு.

விளம்பரம்

யந்திரங்களும் வசியங்களும்

எல்லாவகையான பொல்லாங்குகளையும் நீக்கிக்கொள்ளவும்,
உலகவாழ்க்கையில் வெற்றிபெறவும் வேண்டு
வார்க்குத் தேவையானவை.

	Rs.		
பெருமை, செல்வம், கல்வி, உயர்வைத் தருவனவற்றிற்கு விலை	7	8	0
செம்மை, உடம்புவலிமைக்கு	7	8	0
பேசுந் திறமைக்கு	7	8	0
எந்தக்காரியத்திலும் வெற்றிபெறுதற்கும், வழக்கில்வெல்லுதற்கும்	10	0	0
குதிரைப்பந்தயம், விளையாட்டு, சீட்டாட்டம் முதலியவற்றில் வெற்றிபெறுதற்கு	7	0	0
வியாபாரத்திலும், அலுவலிலும் ஊதியம்பெறுதற்கு	10	0	0
ஆண்வசியத்திற்கு	7	0	0
பெண்வசியத்திற்கு	10	0	0
ஆண்பெண்வசியத்திற்கு	7	0	0
நன்செய் புன்செய் நன்றாய்விளைய	7	0	0
காரியச்சுரங்கம் பயன்தர	100	0	0
ஆயுர்காலம் முழுதும் அறிந்துசொல்ல	15	0	0
எல்லாச் சித்திக்கும் ராபிசாலமன் என்பவரின் யந்திரம்	15	0	0
ஷை முதற்றரம்	50	0	0
ஷை இரண்டாந்தரம்	21	0	0

குறிப்பு;—மணியார்டர்வழியாக மேற்குறிப்பிட்டபடி யந்திரங்களின் விலையை முற்றும் முன் அனுப்புவோர்க்கு யந்திரங்கள் அனுப்பப்படும். வி. பி. பி. வழியாக அனுப்புவதில்லை. வேண்டுவோர் பின்விலாசத்திற்கு எழுதுக:—

D. A. RAM DUTH,
ASTROLOGER,
No: 30, J, Cheku Street,
COLOMBO, (CEYLON.)